# வித்தகர்



## மகா கும்பாபிஷேக சிறப்புமலர் - 2012



இந்து மன்றம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வித்தக விநாயகர், முடிமன்னர் ஆலய இரண்டாவது மகா கும்பாபிஷேகப் பெருவிழா

# சிறப்புமலர்

JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION
THOUGHT WORD DEED


மலராசிரியர்

**முருகேசு கௌரிகாந்தன்**

சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



வெளியீடு

**இந்து மன்றம்**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்.

**28.10.2012**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரணம்

நூலின் பெயர் :- **வித்தகர்**

விடயம் :- **கும்பாபிஷேக சிறப்புமலர்**

மலராசிரியர் :- **முருகேசு கௌரிகாந்தன்**

பதிப்பு :- **2012 ஒக்ரோபர் 28**

பக்கங்கள் :- **xii +34**

அச்சுப்பதிப்பு :- **கணபதி பிறிண்டேர்ஸ்,**
**திருநெல்வேலி.**

வெளியீடு :- **இந்து மன்றம்**
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

பிரதிகள் :- **500**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ☆ | ஆசிச்செய்திகள் | i - xii |
| 1. | வைரவர் (முடிமன்னர்), வித்தக விநாயகர் ஆலய வரலாற்றுச் சுருக்கம் | 1 - 3 |
| 2. | விநாயகரைப் பாடும் பாரதி | 4 - 6 |
| 3. | கும்பாபிஷேகம் – ஒரு சுருக்கக்குறிப்பு | 7 - 8 |
| 4. | முடிமன்னரும் அற்புதங்களும் | 9 - 11 |
| 5. | ஈழநாட்டில் வயிரவர் வழிபாடு | 12 - 18 |
| 6. | உளநலம் பேண உதவும் ஆன்மீக செயற்பாடுகள் | 19 - 25 |
| 7. | சைவாலயங்களில் பலியிடல் – ஒரு கண்ணோட்டம் | 26 - 31 |
| 8. | வித்தக விநாயகர் ஆலயத்தின் வாணிவிழாப் பாடல் | 32 |
| 9. | வித்தக விநாயகனே | 33 |
| 10. | அருட்கவி | 33 |
| ☆ | விநாயகரின் பதினாறு தோற்றங்கள் | 34 |
| ☆ | நிழற்படங்கள் | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமகுருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கோப்பாய் அருள்மிகு வித்தக விநாயகருக்கும் சரஸ்வதி அம்பிகையினுடைய பரிவாரமூர்த்திகளுக்கும் நடைபெறும் கும்பாபிஷேகப் பெருவிழாவுக்கும் வெளிவரும் சிறப்புமலருக்கும் நல்லாசி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம். எல்லா சமயங்களும் சமம் என்ற கோட்பாட்டிலுள்ள சைவ சமயத்தைப் பேணிப் பாதுகாக்கின்ற கடமை எமக்குண்டு. அவ்வகையில் தேசிய கல்வியியற் கல்லூரியில் வித்தக விநாயகனாக அமர்ந்து அருள்பாலிக்கும் விநாயகர் திருவருள் எல்லோருக்கும் கிடைத்து நாட்டில் சாந்தி, சமாதானமாக எல்லா ஜீவராசிகளும் மக்களும் வாழப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சிவஸ்ரீ சு. சுந்தரராஜக்குருக்கள்**

# சமூகஜோதி தேவஸ்தான குருவின் ஆசிச்செய்தி



**வேழமுகத்து விநாயகனைத் தொழ**
**வாழ்வு மிகுந்து வரும்**

யாழ். கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் முடிமன்ன வயிரவர் ஆலயமும் வித்தக விநாயகர் ஆலயமும் ஒருங்கே அமைந்து திருக்குட முழுக்கு விழாக் காணும் பேற்றினை நாம் அனைவரும் பெற்றுள்ளோம். இவ்வருட்பேறு எனக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றே கருதுகின்றேன். இவ்வண்ணம் யான் பெற்ற பேற்றினை வளாக சமூகத்தினரும் மற்றும் அனைவரும் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு அடைவார்களாக என்று எல்லாம்வல்ல எம்பெருமானை வேண்டிக்கொண்டு இவ்விழாவிற்கு காரணர்களான அனைவருக்கும் எனது அருள் ஆசி கிடைப்பதாகுக.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

**சிவஸ்ரீ அகோரசிவக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை அருளாட்சி செய்து கொண்டு இருக்கும் வித்தக விநாயகருக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களின் ஒழுக்கம், பண்பாட்டு விழுமியங்கள், சமயநெறி நின்று வாழும் முறை அனைத்தையும் செயற்படுத்தும் வகையில் விக்கினங்களைத் தீர்க்கும் வித்தக விநாயகர் இந்த ஆலயத்தில் வீற்றிருப்பது தனிப்பெரும் சிறப்பாகும். விநாயகருக்கு நடைபெறும் கும்பாபிஷேகம் கல்லூரிக்கும் கல்லூரியில் இருக்கும் அனைவருக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். இக்கும்பாபிஷேகத்தினை பீடாதிபதி களும், ஆசிரியர்களும், மாணவர்களும் ஒருங்கிணைந்து செயற்படுத்து வது மகிழ்ச்சியைத் தருகின்றது. அதனை தரிசனம் செய்து இறை இன்பம் பெறுவோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அவர்களின்

# ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வளாகத்தில் கோயில் கொண்டு அருள்புரியும் ஸ்ரீ வித்தக விநாயகருக்கு முன்னோடியான மகத்துவம் இந்த விநாயகருக்கு அருகில் உள்ள வயிரவர் சுவாமிகளுக்கு உரியதாகும். இந்த வயிரவர் ஆலயம் போர்த்துக்கேயர் காலத்துக்குரியதென்று நம்பப்படுகின்றது. ஆரம்பத்தில் "கூடம் பற்றை" என்ற பெயருடன் இந்த இடத்தில் அருளாட்சி புரிந்த இத்தெய்வத்தை இப்பகுதி மக்கள் "முடிமன்னர்" என்ற பெயரில் பரவி அருள்பெற்றனர். இப்பிரதேசத்தில் அக்காலத்தில் "வளவுக்கு ஒரு வயிரவர்" என்று பல வயிரவர் கோயில்கள் இருந்தாலும் "முடிமன்னர்" பல வளவுகளிலுள்ள மக்களுக்கும் காவல் தெய்வமாக இருந்து அற்புதங்கள் பல புரிந்த தெய்வமாக வணங்கப்பெற்று வந்திருக்கிறார். எமது சமயத்தில் விநாயகருக்கு முதன்மையளிக்கும் மரபு இருந்தமையால் எமது கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் கல்வி, கலை, பண்பாடு என்பனவற்றின் மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு 31.08.2003 ஆவணிச் சதுர்த்தியன்று ஸ்ரீ வித்தக விநாயகர் ஆலயம் மற்றும் முருகன், சரஸ்வதி ஆகிய தெய்வங்களுக்கும் முடிமன்னருக்கும் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றமை வரலாறு.

எமது நைமித்தியக் கிரியை வழிபாட்டில் மகா கும்பாபிஷேகம் முதன்மையான இடத்தைப் பெறுகின்றமை அனைவரும் அறிந்தது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது இக்கிரியையினை பயபக்தியுடன் ஆற்றி வழிபாட்டினைச் செய்வதன் மூலம் அதிக வரங்களைப் பெறலாம் என்பது சைவர்களாகிய எமது இறுக்கமான நம்பிக்கையாகும். அதன்படி குறிப்பிட்ட பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவு பெறுவதற்கு முன்னதாகவே அடுத்த கும்பாபிஷேகப் பெருவிழா 28.10.2012 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதும் தொடர்ந்து கும்பாபிஷேக சிறப்புமலர் வெளிவருவதும் எம்பெருமானின் திருவருளே என்று வியந்து இத்திருப்பணிகளில் ஈடுபட்டுழைக்கும் அனைவரையும் பாராட்டி எல்லோருக்கும் எம்பெருமானின் திருவருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி
## க.பேர்ணாட் அவர்களின்
# ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினரால் வழிபாடு செய்யப் பெறுகின்ற மூர்த்திகரமான ஸ்ரீ வயிரவப் பெருமானுடன் கூடிய வித்தக விநாயகப் பெருமானுக்கு 28.10.2012 அன்று குடமுழுக்குச் செய்யப்பெறுவதும் கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியிடப்பெறுவதும் மிகவும் மகிமையைத் தருவதும் வரலாற்றுச் சிறப்புமிக்கதுமாகும். யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உரிய இடத்தில் நிறுவப் பெறுவதற்கு முன்னதாகவே பல நூற்றாண்டுகளாக இவ்வாலயம் அப்பிரதேச சைவத்தமிழ் மக்களால் "முடிமன்னர்" என்ற பெயரில் பூசை செய்து வழிபாடாற்றப்பெற்ற திருத்தலமாக விளங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்பெருமானார்க்குச் செய்யப்பெறுகின்ற திருக்குடத் திருமஞ்சனப் பெருவிழாவானது யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினரின் ஆன்மீக நிலையினையும் மேம்படுத்த இறையருளை வேண்டி கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னின்று நடாத்தும் கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு. எஸ்.கே.யோகநாதன், இந்து மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் திரு. மா. பிரபாகரன் மற்றும் கல்வியியலாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவரையும் பாராட்டி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திருமதி சரஸ்வதி தர்மலிங்கம்**
**திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்**
**ஆகியோர் வழங்கிய**

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள வித்தக விநாயகர் மற்றும் முடிமன்னர் வயிரவர் ஆலயங்களின் கும்பாபிஷேக செய்தி அறிந்து மிகவும் மனம் நெகிழ்ந்தோம். கல்லூரியில் தனியே கல்விசார் நடவடிக்கை மட்டுமன்றி சமூக விழுமியங்களும் நியமங்களும் பேணப்பட வேண்டும். இந்த வகையிலே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு பீடாதிபதி மற்றும் கல்விச் சமூகத் தினரைப் பாராட்ட வேண்டிய கடப்பாடு உண்டு. கல்வியியற் கல்லூரியின் சகல முகில்நிலை ஆசிரியர்களும் தத்தமது சமய ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுவதற்கான ஒழுங்குகள் செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

தமிழ்பேசும் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களின் பணி இன்றியமையாதது. இதைக் கருத்தில் எடுத்து எங்கள் குடும்பத் தலைவர் அமரர் வி. தர்மலிங்கம் அவர்களுடைய ஞாபகார்த்தமாக அன்றைய சான்றோர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க இக்கோயில் அமைந்திருக்கும் நிலப்பரப்பு உள்ளடங்கலாக பெருநிலப்பரப்பு ஒன்றை அன்பளிப்பாக நாங்கள் வழங்கியிருந்தோம். இன்று கல்லூரி சகல துறைகளிலும் வளர்ச்சி கண்டு திகழ்வதை இட்டு உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முதலாவது பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் (அவுஸ்திரேலியா) அவர்களின்**

## ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரித் தாய் தனது ஒரு தசாப்த காலத்தை நிறைவுசெய்து கல்விச் சேவையை ஆற்றி வருகின்றார். இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையான வித்தக விநாயகர் முடிமன்னர் தெய்வங்களின் ஆசியும் அற்புதமும் அருட்சக்தியை வழங்கியுள்ளது. இத்தெய்வங்கள் உறைந்திருக்கும் ஆலய மகாகும்பாபிஷேக விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஆன்மாக்கள் லயிக்கும் இடம் ஆலயம். ஆசிரியத்துவத்திற்கு அருட்சக்தி தேவை. அச்சக்தி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் வித்தக விநாயகர் முடிமன்னர் ஆலயத்தினூடாக முகிழ்நிலை ஆசிரியர்களுக்குக் கிடைக்கின்றது. இவ் அருட்சக்தி மேலும் பெருக இக்குடமுழுக்கு கும்பாபிஷேக விழா வழிசமைப்பதாக. இவ்விழாவைச் சிறப்பாக நடத்தும் அனைவருக்கும் எம்பெருமானின் நல்லாசிகள் கிடைப்பதாக.

**வலி. கிழக்கு பிரதேச செயலர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்களின்**

## ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் வித்தக விநாயகருக்கு மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இடம்பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். உலகிலே தோன்றிய தொன்மைமிக்க இந்து மதத்தினுடைய காணாபத்திய சமய வழிபாட்டிலே மட்டுமல்ல எல்லா இந்துமதப் பிரிவுகளிலும் கணபதி முக்கியம் பெறுகின்றார். அதிலும் கல்வியியற் கல்லூரியிலே இருக்கின்ற வித்தக விநாயகர் பல்லாயிரம் ஆசிரியர்களை இந்த அவனிக்கு உவந்தளித்த பெரும் கடவுளாகப் போற்றப்படுகின்றார். கோப்பாயில் கற்பகமாய் வீற்றிருந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தினர் அனைவருக்கும் அருள்பாலிப்பது மட்டுமன்றி வித்தக விநாயகரின் நிழலில் அருள் பெற்றவர்கள் இன்று உலகளாவிய ரீதியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். "இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்காய் வித்தக விநாயகரின் கும்பாபிஷேகப் பெருவிழாவினைக் காண்பதற்காய் ஓடோடி வாரீர்" அவர் அருளைப் பெறுவீர்களாக! என்று கேட்டு மகாகும்பாபிஷேக மலரும் சிறப்பாக வெளிவர எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர்**
**முனைவர் ஆறு. திருமுருகன் அவர்களின்**

## ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வித்தக விநாயகர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். இத்திருக்கோவிலை அமைப்பதற்கு அன்றைய பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் அவர்கள் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது. இக்கோவிலை அமைப்பதற்கான செலவை லண்டன் சிவயோகம் அறக்கட்டளை எனது அன்பான வேண்டுதலை ஏற்றுச் செய்தமை நன்றிக்குரிய விடயமாகும். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் இத்திருக்கோவிலைச் சீராகப் பேணி வருவது பாராட்டுக்குரியது. ஆன்மீக உணர்வுடன் கூடிய ஆசிரியர்களை உருவாக்குவதற்கு இத்திருக்கோவில் பெருந்துணை செய்வதை யான் அறிவேன். இத் திருக்கோவில் சூரிய சந்திரர் உள்ள வரை நிலைத்திருக்கப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**சிரேஸ்ட ஆலோசனைச் சபை உறுப்பினர்**
**வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா**
**அவர்களின்**

## ஆசிச் செய்தி




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வித்தக விநாயகர் முடிமன்னர் ஆலய மகா கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். 2002ஆம் ஆண்டிலிருந்து எமக்கெல்லாம் அருள்பாலித்துவரும் எம்பெருமானுக்கு குடமுழுக்கிட்டு கும்பாபிஷேகம் செய்யும் பேறு உயர்வானது. ஆலயம் சிறப்பாகப் புனருத்தாரணம் செய்யப்பெற்று இந்த விழா நடைபெறுகின்றது. இதற்கு வழியை ஏற்படுத்திய எம்பெருமானுக்கும் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அவர்களுக்கும், வித்தக விநாயகர் முடிமன்னர் ஆலய இந்து மன்றத்தினருக்கும் எல்லாம்வல்ல இறையருள் கிடைப்பதாக, இந்த பெருவிழாவுக்காக பல்வேறு பணிகளையும் தொண்டுகளையும் ஆற்றிவரும் கல்வியியலாளர்களும் முகிழ்நிலை ஆசிரியர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள் ஆவர். இந்தக் கைங்கரியம் மிகவும் சிறப்பாக மேற்கொள்ள இறையருளை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலதிக பீடாதிபதி திரு. சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரியின் இந்து மன்றத்தினால் வெளியிடப்பெறும் கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இன்றைய காலகட்டத்தில் எமது சமயத்தில் வழிபாட்டு முயற்சிகள் குறைவடைந்து செல்கின்றமையாலும் கட்டுப்பாடுகள் அருகிச் செல்வதனாலும் மத மாற்றங்கள் நடைபெறுவதனை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. அவ்வகையில் எமது சைவசமய வளர்ச்சிக்கு இக் கும்பாபிடேகக் கிரியைகளும் வெளியிடப்பெறும் சிறப்புமலரும் மிகவும் உந்து சக்தியாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பீடாதிபதி மதிப்புக்குரிய திரு. எஸ்.கே.யோகநாதன் அவர்களையும் இந்து மன்றத்தினரையும் பங்களிப்புச்செய்த ஏனையோரையும் பாராட்டி, எல்லோர்க்கும் வித்தக விநாயகர், முடிமன்னர் வைரவர் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து, எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

---

**தேசிய கல்வியியற் கல்லூரியின் இந்து மன்றக் காப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. பிரபாகரன் அவர்கள் வழங்கிய**

# ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இந்து மன்றத்தினரின் செயற்பாடுகள் கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் மத்தியில் பெரும் மதிப்பைப் பெற்று வருகின்றமை போற்றுதற்குரியது. பன்முக ஆளுமை விருத்திச் செயற்பாடுகளில் ஒன்றாக அமையும் ஆன்ம விருத்தி அடிப்படையை எமது ஆலயத்தில் நடைபெறும் நித்திய நைமித்திய கிரியைகள் வழங்கிக் கொண்டிருக்கின்றமை மறக்க முடியாததொன் றாகும். தற்போது எமது ஆலயத்தில் நடைபெறும் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகமானது எவ்வித இடையூறுகளுமின்றி நிகழ்த்தப் பெறுவதானது எதிர்காலத்தில் எமக்கெல்லாம் பொருட் செல்வத்தையும் அருட்செல்வத்தையும் பெற்றுத் தருவதாக அமையும். இப்புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்டுழைக்கும் எமது மதிப்புக்குரிய பீடாதிபதி உயர் திரு. எஸ். கே. யோகநாதன் முதற்கொண்டு அனைவரையும் உளமாரப் பாராட்டி, திருக்குடமுழுக்கு மலரும் மிகவும் அழகாகவும் பயன்தரு முறையிலும் வெளிவர எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி ஜெயமலர் தியாகலிங்கம்**
**(உபபீடாதிபதி, கல்வியும் தரமேம்பாடும்)**
**அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துச் செய்தி



"மூஷிக வ்ஹாஹன மோதக ஹஸ்த
சாமரகர்ண விலம்பித ஸ்த்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
வித்தக விநாயக பாத நமஸ்தே"

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எம் அனைவருக்கும் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வித்தக விநாயகர் உடனுறை முடிமன்னர் வயிரவப் பெருமான், சரஸ்வதிதேவி, பாலமுருகப்பெருமான் சமேத அருட் தெய்வங்கள் எழுந்தருளி இருக்கும் ஆலயத்திற்கு இரண்டாவது மகா கும்பாபிஷேகம், திருவருளும், குருவருளும் கைகூடி மிகவும் பக்தி பூர்வமாக (28.10.2012) நடைபெற்றிருக்கின்றது.

"கும்பாபிஷேகம் என்பது ஒரு பெரும் மங்களகரமான கிரியை யாகும். கும்பாபிஷேக கிரயைகளைக் காண்பது, எண்ணைக் காப்பு சாத்துதல் என்பன ஒருவரது வாழ்வில் கிடைத்தற்கரிய பேறாகும். அதற்கும் மேலாக அந்த சுற்றாடலே தெய்வீகம் சிறப்பு பெறுகின்றது. அதாவது, மக்கள் செல்வம், கல்விச் சிறப்பு, மனத்தில் சாந்தி, சுபீட்ச வாழ்வு, அரச நீதிச் சிறப்பு என்பன கிடைப்பதற்கு வழி பிறக்கின்றது.

இவ்வாறான தெய்வீகம் பொருந்திய எமது ஆலய கும்பாபிஷேக நாள்களில், எம்மையெல்லாம் ஆன்மீக சிந்தனை உடையவர்களாகவும் நன்மனத்தை உடையவர்களாகவும் ஆக்கிய விநாயகப்பெருமான் உடனுறை தெய்வங்களின் அருளாட்சி சொல்லில் வடிக்க முடியாதது. அதனை ஆத்மார்த்தமாகவே உணர்ந்துகொள்ள முடியும்.

இப்பணியை ஆரம்பித்து, சிறப்புற நடாத்தி இறையருள் கூடுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பீடாதிபதி, இந்துமாமன்றத்தினர், கல்வியியலாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் இறையருள் கிடைத்திட பிரார்த்தித்து உளங்கனிந்த வாழ்த்துக்களையும் வழங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயிரவர் (முடிமன்னர்), வித்தக விநாயகர் ஆலய

# வரலாற்றுச் சுருக்கம்

முருகேசு கௌரிகாந்தன்
மலராசிரியர்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்திலே மூலமூர்த்தியாகக் கோயில் கொண்டு அருள்புரியும் வித்தக விநாயகர் ஆலயம் 2003ஆம் ஆண்டு ஆவணி 31ஆம் நாள் (விநாயக சதுர்த்தி) அன்று முதன் முதலாகப் பிரதிஷ்டை செய்யப் பெற்றதாகும். இதன் வலப்புறமாக அமைந்துள்ள வயிரவப் பெருமான் ஆலயம்தான் தொடக்க ஆலயம். இது போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த காலத்திலிருந்து வழிபடப்பெற்று வந்துள்ளதாகத் தெரிகின்றது. இந்த வயிரவப் பெருமானை இப்பிரதேச மக்கள் "முடிமன்னர்" என்றும் கூடம்பத்தை வயிரவர் என்றும் அழைத்து வழிபாடாற்றி வந்தனர்.

மா, பலா, ஈரப்பலா, முருங்கை, தென்னை, பனை, வேம்பு முதலான பல பயன்தரு மரங்களும் பூமரங்களும் நிறைந்த பற்றைக் காடுகளாற் சூழப்பெற்ற வடகோவைப் பிரதேசத்தில் அமைந்த இவ்வாலயத்தை மக்கள் தமக்குத் தெரிந்த முறையில் புனிதப்படுத்தி அபிடேகம் செய்து, விளக்கேற்றி வடைமாலை சாத்தி, மலர் தூவி வழிபாடு செய்து வந்தமையால் மூர்த்திகரமான தெய்வமாக இத் தெய்வம் பிரசித்தமானது. இத் தெய்வத்தின் மூலம் பல அற்புதங்களைத் தரிசித்த மக்கள் தமது காவல் தெய்வமாக இதனை பய பக்தியுடன் வழிபாடாற்றி வந்தனர்.



இவ்வாலயம் உள்ளிட்ட 25 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட நிலப்பரப்புக்குப் பிற்காலத்தில் கந்தரோடையைச் சேர்ந்த பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சின்னத்தம்பி சுப்பிரமணியம் (12.1873 - 12.01.1964) அவர்கள் உரிமையாளராக

விளங்கினார். குருநகர் கடற்கரை வீதியில் வைத்தியசாலை அமைத்துப் பணியாற்றிய இவர் அங்கிருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தமது காரில் இங்கு வந்து வழிபாடாற்றிச் செல்வாராம்.



முடிமன்னர் ஆலயத்திற்குப் பக்தியுடன் பூசை செய்து அவ்வாலயம் அமைந்த பெரும் நிலப்பரப்பைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான ஒருவரைத் தேடிய வேளையில் கிடைக்கப் பெற்றவர்தான் சரவணையைச் சேர்ந்த பெரியார் நாகமுத்து இராமநாதன் (12.02.1914 - 01.02.1999) அவர்களாவர். இவர் கூடம்பற்றைக் காணியில் அறுபது ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து முடிமன்னர்க்குப் பொங்கல், பூசை வழிபாடாற்றி இப்பெருமானாரின் திருவருளினைத் தாமும் பெற்று தமது குடும்பத்தவர்களும், இப்பிரதேசத் தைச் சேர்ந்த பல குடும்பத்தவர்களும் பெற்றுய்ய வழிகாட்டியாக விளங்கினார்.



டாக்டர் சுப்பிரமணியம் அவர்களுக்கு மகப் பேறின்மையால் முடிமன்னர் கோவிலமைந்த காணி அவரின் பெறாமகனான திரு. விஸ்வநாதன் தர்மலிங்கம் (05.02.1918 - 02.09.1985) அவர்களுக்கு உரிமையானது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான திரு வி. தர்மலிங்கம் அவர்கள் பெரிய தந்தையாரை விடவும் முடிமன்னர் ஆலயத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தாரென்று கூறப்படுகிறது. இவரின் பிள்ளைகளான தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களும், சித்திரலேகா தர்மலிங்கம் அவர்களும் நன்கொடையாக வழங்கிய காணியிலேதான் கல்வியியற் கல்லூரியும் வித்தக விநாயகர் மற்றும் முடிமன்னர் ஆலயமும் நிறுவப்பெற்றன.

இந்த ஆலயங்களை நிறுவுவதற்கு முன்னாள் பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன், உபபீடாதிபதி திரு. பா. தனபாலன், முன்னாள் இந்துமன்றக் காப்பாளர்களான திருமதி ஞானசக்தி கணேசநாதன், திருமதி ஜெயமலர் தியாகலிங்கம் விரிவுரையாளர், திரு. மா. பிரபாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தற்போதய இந்து மன்றக்காப்பாளர்), அருட்கவி சீ.விநாசித்தம்பிப்புலவர் (03.11. 1923 - 11.12. 2005), டாக்டர் லயன். வை. தியாகராஜா, செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், விரிவுரையாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள், கல்விசாராப் பணியாளர்கள் ஆகியோரின் பெருமுயற்சியும் நிதியுதவியும் சிவயோகம் அறக்கட்டளையினரினதும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினரதும் பெருமளவு நிதியுதவியும் பெருமளவு உதவின.

எமது சைவாலய மரபில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறவேண்டியது அவசியமானதாகும். இதன்படி உரிய பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவு பெறுவதற்கு முன்னதாகவே தற்போதய பீடாதிபதி உயர்திரு. எஸ்.கே.யோகநாதன் அவர்களின் காலத்திலேயே அடுத்த புனராவர்த்தன மகா கும்பாபிடேகத்தையும் செய்து விடவேண்டுமென்று தற்போது உள்ளகப் பயிற்சியை மேற்கொள்ளும் இந்து சமயத்துறை முகிழ்நிலை ஆசிரியர் பெருமுயற்சியெடுத்து, பீடாதிபதி, இந்து மன்றக் காப்பாளர் ஆகியோரின் அரிய வழிகாட்டலில் கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் உதவியுடன் 28.10.2012 ஞாயிற்றுக்கிழமை திருக்குடத்திருமுழுக்குச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. பிரதம சிவாச்சாரியர் சிவ ஸ்ரீ சு. சுந்தரராஜக் குருக்கள், கோவில்குரு சிவஸ்ரீ அகோரசிவக்குருக்கள் ஆகியோரின் தலைமையில் இக்கிரியை மிகவும் பக்திபூர்வமாக நிகழ்த்தப்பெற்றது.

சிறப்பாகவும் அழகான முறையிலும் புனர்நிர்மாணம் செய்யப் பெற்ற ஆலயங்களில் வித்தக விநாயகப்பெருமான், முடிமன்னர் (வயிரவர்), முருகப்பெருமான், சரஸ்வதிதேவி, காவல் வயிரவர் ஆகியோர் வீற்றிருந்து அருளமுதத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றனர். தல விருட்சமான அற்புத வேம்பும் தண்ணிழல் அளித்து காவல் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகரைப் பாடும் பாரதி



**கலாகீர்த்தி, பேராசிரியர் சி. தில்லைநாதன்**
வெலிப்பாற, தலவத்துகொட.



ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மனித வாழ்விற் பெற்றிருந்தளவு முக்கியத்துவத்தை இன்றும் எமது வாழ்விலே சமயம் பெறுகிறது என்றால், அதற்குக் காலத்துக்கேற்ற வகையிலே சமயத்தின் பண்பினையும் பயனையும் புலவர் பெருமக்கள் காட்டி வந்தமையும் ஒரு காரணமாகும்.

மக்களாட்சி மலர்ந்தவேளையிலே தோன்றித் தமிழ்க் கவிதை வரலாற்றிலே புதுயுகத்தைத் தோற்றுவித்த பாரதி - விடுதலை கூடிய மக்கள் யுகத்தை வாழ்த்தி வரவேற்ற பாரதி - இஷ்ட தெய்வங்களுக்குப் பாமாலை சூட்டும் முன்னையோர் பக்திமரபினை யொட்டி அனேகமாக இந்துக்கள் வழிபடும் எல்லாத் தெய்வங்களையுமே பாடியிருக்கிறான். ஆயினும், இவ்வுலகம் பொய்யென்னும் கருத்தினை வலியுறுத்தி ஆன்மீக ஈடேற்றத்தை மட்டும் வேண்டும் வகையில் அவனது பாடல்கள் அமையவில்லை.

வறுமையிலும் துன்பத்திலும் குழப்பத்திலும் வாடிய மக்கள், சோற்றுக்கும் துணிக்கும் உலகியல் வாழ்வு நலம்பெறவும் உதவுமொரு நம்பிக்கை ஒளியாக இறைவனை நோக்கிய காலகட்டத்திலே தோன்றிய பாரதி, பொதுமக்கட் சார்பாக எழுந்துநின்று சமூகநல உணர்வோடு இறைவனை வேண்டுகின்றான். தெய்வபக்தியினாலே,

*"சித்தந் தெளியும் - இங்கு*
*செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்"*

என்றும்,

*"பக்தி யுடையார் காரியத்திற்*
*பதறார், மிகுந்த பொறுமையுடன்*
*வித்து முளைக்குந் தன்மைபோல்*
*மெல்லச் செய்து பயனடைவார்"*

எனவும் நம்பிய பாரதி, விநாயகர், பராசக்தி, முருகன், கலைமகள், திருமால், திருமகள் ஆகிய தெய்வங்களை "ஆறுதுணை" எனக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரைப் போற்றித் "தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்ய" முனைந்து, "விநாயகர் நான்மணி மாலை"யினைப் பாடினான் பாரதி. நான்கு மணிகளைத் தொடுப்பது போல, முறையே வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் ஆகிய நால்வகைப் பாவகைகள் மாறிமாறிவர, அந்தாதித் தொடையாகச் சிவப்பிரகாச சுவாமிகளின் "நால்வர் நான்மணிமாலை" முதலிய பிரபந்தங்களைப் பின்பற்றி இந்த நான்மணி மாலையினை நாற்பது பாடல்களில் இயற்றியுள்ளான் பாரதி. யாப்பமைதியினால் ஒருமைபெற்ற இவ்வகைப் பிரபந்தங்கள், பல புலவர்களினாலே திரும்பத் திரும்ப ஆளப்பட்டுத் தேய்வுகண்டு நின்றன வெனினும், பாரதி கையிலே புதுப்பொலிவும் தெளிவும் செறிவும் அர்த்தமும் பெற்று நிற்பதை அவதானிக்கவியலும்.

பாரதியின் விநாயகர் நான் மணிமாலை,
*"ஏழையர்க் கெல்லாம் இரங்கும் பிள்ளை*
*வாழும் பிள்ளை மணக்குளப் பிள்ளை"*

என்று புதுவை மணக்குளப் பிள்ளையார்மீது பாடப்பட்டதென்றாலும் பொதுப்பட விநாயகர் பெருமைகளையும் பாரதியின் அபிலாசைகளையும் காட்டுவதாகும். பரம்பொருளைக் கணபதியாகப் பரவும் காணபத்திய முறையிலே அமைந்துள்ளது இப்பிரபந்தம்.

*"விநாயக தேவனாய் வேலுடைக் குமரனாய்*
*நாரா யணனாய் நதிச்சடை முடியனாய்ப்*
*பிறநாட் டிருப்போர் பெயர்பல கூறி*
*அல்லா! யெஹோவா! எனத்தொழு தன்புறும்*
*தேவருந் தானாய்த் திருமகள் பாரதி*
*உமையெனுந் தேவியர் உகந்தவான் பொருளாய்*
*உலகெலாங் காக்கும் ஒருவன்".*

என்று பாராட்டுகிறான் பாரதி.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப்பொருட்களை வேண்டி, சலனமில்லா மனமும் இருளற்ற மதியும் செல்வமும் தன்னையாளுந் திறனும் பொருந்திய கரவு, வஞ்சனை, கவலை நீங்கிய நூறு வயதுடைய பெருவாழ்வினை வேண்டி விநாயகரைப் பாடுகின்றான் பாரதி. தன்னைக் கட்டுதல், விநாயகரைப் போற்றுதல் ஆகியவற்றுடன், பிறர்துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல் ஆகியவற்றையும் தன் கடமையாகக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூற்றாண்டின் மக்கள் கவி பாரதி,

நாட்டினைத் துயரின்றி நன்கமைத் திடுவதும்
உள்ளமெனு நாட்டை ஒருபிழை யின்றி
ஆள்வதும் பேரொளி ஞாயிறே யனைய
நோக்கமாகக் கொண்டு நின்பதம் நோக்கினேன்"

என்று தன் உள்நோக்கினை வெளியிடுகிறான். தன் சுய துயரினைப் போக்குவதும், மதியினைப் பெருக்கி உள்ளத்தைத் தூய்மையாக்கி ஆள்வதும் மட்டுமல்ல அவனது குறிக்கோள். நாட்டினைத் துயரின்றி நன்கமைக்கும் பரந்த நோக்கமும் விநாயகரை அவன் வேண்டக் காரணமாகும்.

பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்
மண்மீ துள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புடன் இணங்கிவாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா!"

என்று பரந்த மனம் படைக்கப் பெற்ற பாரதி தான் பிரதிநிதித்துவப்படுத்திய மக்கள் சார்பான தனது வேண்டுகோளை, இதுவரை வந்த எந்தக் கவிஞனும் வெளியிடாத வகையிலே துணிவோடும் தெளிவோடும் நம்பிக்கையோடும் விநாயகர்முன் சமர்ப்பிக்கின்றான். அவனொத்த விசால மனதுடன் இறைவன் பணிசெய்வதே இக்காலத்துக்கேற்றதாகும்.

எல்லோரும் இன்புற்றிருக்கும் நினைப்புடன், கவலையும் துயரும் அச்சமும் சூழ்ந்த கலியினை வென்று புதுயுகத்தினைக் காணத் துடித்தெழுந்த பாரதி, தனது விநாயகர் நான்மணிமாலையினைப் பின்வருமாறு முடிக்கின்றான்.

"கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதம்நான் கொண்டனன்; வெற்றி
தருஞ்சுடர் விநாயகன் தாளிணை வாழியே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கும்பாபிஷேகம்

– ஒரு சுருக்கக் குறிப்பு –

**சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள்**
**வவுனியா.**

கும்பாபிஷேகம் என்பது நான்கு வகையாகின்றன. ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரீதம் என்பன. அவை புதிதாக ஆலயம் அமைத்துப் புதிய விக்கிரகம் வைத்துப் பிரதிஷ்டை செய்வது ஆவர்த்தம் என்றும், சிதைந்த ஆலயத்தைத் திரும்பவும் கட்டி விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வது அநாவர்த்தம் என்றும், ஸ்தூபியைப் பழுதுபார்த்தும் அதில் இருக்கின்ற விக்கிரகங்களைத் திருத்தியும் பிரதிஷ்டை செய்வது புனராவர்த்தனம் என்றும், ஆலயத்தினுள் தற்செயலாக மரணம் ஏற்பட்டாலும் அதற்காக உடனடியாகச் செய்வது அந்தரீதம் எனவும் கூறப்படுகின்றன.

அந்தரீதக் கும்பாபிஷேகத்திற்கு நாள், நட்சத்திரம், முகூர்த்தம் என்பன பார்க்கத் தேவையில்லை. இதைப் பிராயச்சித்த கும்பாபிஷேகம் என்றும் அழைப்பர்.

கும்பத்திலே எம்பெருமானை எழுந்தருளச் செய்து, யாகத்திலே பிரதான வேதிகையின் நடுவே இருத்தி வலது புறத்திலே சக்தி குடும்பமும், எட்டுத்திக்குகளில் அஷ்ட வித்யேஸ்வரரையும் வைத்து பூஜித்து ஓம குண்டம் அமைத்து அதிலே சிவாக்கினியை உண்டாக்கி அந்த அக்கினியிலே எம்பெருமான ஆவாகித்து மூல மந்திரத்தினாலும், காயத்திரி மந்திரத்தினாலும் சமித்து, நவதானியம், நெற்பொரி , அன்னம், நெய் என்பவற்றால் ஓமம் செய்து வழிபடுதல் யாகபூஜை எனப்படும்.

குடம் உடலாகவும் அதிலே சுற்றப்படுகின்ற நூல் நாடிகளாகவும், மாவிலை சடையாகவும், தேங்காய் தலையாகவும், கூர்ச்சம் கேசமாகவும், சுற்றப்படுகின்ற ஆடை தோலாகவும், நீர் இரத்தமாகவும் உள்ளே போடப்படுகின்ற நவரத்தினம், பவுண் என்பன பிராணனாகவும் மந்திரங்கள் சக்தியாகவும் அமையும். கும்பாபிஷேகத்தின் முதல்நாள் மந்திரங்களோடு நிகழும் கடஸ்தாபனம் இவற்றைத் தெளிவாகக் காட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகத்திலே வைத்துப் பூஜித்த கும்பத்திலிருந்து கருவறையிலே அமர்ந்திருக்கின்ற எம்பெருமான் திருவுருச் சிலைக்கும் நூல் போடப்பட்டு அஷ்டமூர்த்தி, மூர்த்தீஸ்வரர், மூர்த்தீஸ்வரி ஆகியோரை அக்கினியிலே பூஜித்து ஓமம் செய்து எம்பெருமானது சிலையை, இடுப்பின் கீழுள்ள பகுதியை பிரம்மமாகவும், கழுத்து முதல் இடுப்பு வரையுள்ள பகுதியை விஷ்ணு பாகமாகவும், கழுத்துக்கு மேலுள்ள பகுதியை உருத்திர பாகமாகவும் மூன்று பாகங்களாகப் பகுத்து யாகாக்கினியிலே ஆகுதி செய்து நூலின் மூலமாகக் கருவறையிலே இருக்கின்ற பெருமானுக்கு மூன்றுமுறை சென்று ஆகுதி மூலமாக கும்பத்திலும் அக்கினியிலும் ஆவாகித்த மூர்த்தியைச் சேர்த்தல் "ஸ்பர்சாகுதி" என்று சொல்லப்படும்.

இவை முடிந்ததும் யாக கும்பத்திலே, அக்கினியிலே ஆவாகனம் செய்த மூர்த்தியை சேர்த்துப் பஷ்டிபாஞ்சலி செய்து, கும்பத்திற்குத் தீபாராதனை செய்து வேத ஸ்தோத்திர தேவாரப் பாராயணம் செய்து, சர்வ மங்கள வாத்திய சகிதம், சகலவிதமான ராஜ உபசாரங்களோடும் வீதி வலமாக வந்து பெருமானுக்கு அபிஷேகம் செய்தலே கும்பாபிஷேகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடிமன்னரும் அற்புதங்களும்

எஸ்.கே.யோகநாதன்
பீடாதிபதி,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.



சைவசமய மரபிலே தெய்வங்களை பெருந் தெய்வங்கள், கிராமியத் தெய்வங்கள் என்று பகுத்துப் பார்க்கும் முறைமையுண்டு. இவற்றை ஆகமம் சாராத வழிபாடு தெய்வங்கள் என்றும் வகைப்படுத்துவ துண்டு. இந்தத் தெய்வங்கள் நிகழ்த்திய அற்புதங்களினாலேயே பெரிதும் சிறப்பும் பிரசித்தியும் பெறுகின்றன. பெருந் தெய்வங்கள் நிகழ்த்திய அற்புதங்கள் அல்லது திருவிளையாடல்களை வடமொழியில் எழுந்த மகா புராணங்களும் தமிழில் எழுந்த புராணங்களும் விரிவாகக் கூறியிருக் கின்றன. கிராமியத் தெய்வங்களான ஐயனார், வயிரவர், மாரியம்மன், கண்ணகை அம்மன், காளியம்மன், பெரியதம்பிரான், முனியப்பர், அண்ணமார், மாடசாமி, முடிமன்னர் முதலானவற்றுடன் சமய அறிவில் குறைந்தவர்களும் நேரடியாகத் தொடர்புபட்டு வழிபாடு செய்வதனால் எண்ணிலடங்காத அற்புதங்கள் நடைபெற்றிருக்கின்றன. "அற்புதங்களை பலரும் அறியத்தக்கதாகக் கூறக்கூடாது" என்ற நம்பிக்கை நம்மிடையே மிகவும் வலுப்பெற்றிருப்பதனால் அவற்றைப் பற்றி நாம் அறிய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

எமது கல்லூரி வளாகத்திலே உள்ள வித்தக விநாயகர் கல்லூரிச் சமூகத்தினர் உள்ளத்திலே நிறைந்து "வாழ்வினுக்கு எங்கள் கண்ணன்" என்று மகாகவி பாரதி பாடியது போல எங்கள் ஒவ்வொருவருடைய பல்வேறு வகையான துன்பங்களையும் போக்கியருள் புரிகின்றார் என்ப தினை எமது முகிழ்நிலை ஆசிரியர்கள் பலரிடமிருந்து பெற்ற கருத்துக் கணிப்பின் மூலம் அறியக்கிடக்கிறது. அற்புதம் என்பது இயற்கைக்கு மாறானது; எதிர்பாராவிதமாக நடைபெறுவது என்ற கருத்தியல்களின் அடிப்படையில் பார்க்கும்போது அன்றாடம் ஏற்படும் தடைகள் பல வழிகளிலும் நீங்குவதனைப் பெரிய அற்புதங்கள் என்று கூறுவது பொருத்தமுடையதா என்ற வினாவும் நியாயமானதே. இஃது இவ்வாறி ருக்க, எங்கள் வித்தக விநாயருக்கு சமீபமாகக் கோயில் கொண்டுள்ள முடிமன்னர் அல்லது வயிரவப்பெருமான் ஏறக்குறைய நானூறு ஆண்டுகட்கு முன்பிருந்தே கோப்பாய் பிரதேச மக்களால் வழிபடப்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளமையால் இத் தெய்வம் நிகழ்த்திய பல அற்புத சம்பவங்களைப் பற்றிக் கேள்விப்படக்கூடியதாக இருக்கின்றது.

சைவசமயத்திலே வயிரவர் காவல் தெய்வமாக வழிபாடு செய்யப் பெறுகின்றார். எமது கல்வியியற் கல்லூரி அமைந்துள்ள பிரதேசத்தின் காவல் தெய்வமாகவும் இத் தெய்வம் விளங்கியமைக்குப் பல அற்புதக் கதைகளைக் கூறமுடியும்.

இந்தத் தெய்வம் இந்தப் பிரதேசத்தில் பண்டைக்காலத்தில் சுயம்பு மூர்த்தியாகத் தோன்றியிருக்கவேண்டும் என்று கூறப்படுகின்றது. போர்த்துக்கேயர் காலத்தில் பெரும் பற்றைக் காடாக இருந்த இடத்தின் மத்தியில் காணப்பட்ட இவ்வாலயத்தில் மாடுகளை வெட்டுவதன் மூலம் பசுக்கொலையால் பெரும் பாவம் தம்மைப் பீடிக்காது என்ற எண்ணத்தில் மாடுகளை வெட்ட வந்தவர்களை அரசன் வடிவில் நின்ற ஒருவர் வாள்கொண்டு அவர்களைத் துரத்திச் சென்று எச்சரித்து மறைந்தருளிய சம்பவத்தைப் பற்றி மெய்சிலிர்க்கும் வகையில் எமது விரிவுரையாளர் ஒருவர் கூறியிருக்கிறார். எமது கல்லூரிக்கு அருகிலேதான் அக்காலத் தமிழ் மன்னர்கள் அடிக்கடி பயணம் செய்யும் இராசபாதையும் உள்ளது. அரசர்களும் அவர்களது படைவீரர்களும் பெரும் பற்றைக் காடுகளையே இயற்கை அரணாகக் கொண்டிருந்தனர். எனவே அவர்களாலும் இக் கடவுள் வழிபாடு செய்யப்பெற்றிருக்கலாம்.

இவ்வாலயத்தினைச் சுற்றிவரவுள்ள பல வளவுகளுக்குள் நள்ளிரவு வேளையில் முடிமன்னர் முதியவர் வடிவில் உலாவருவதனைப் பற்றி இப்பிரதேச மக்கள் கூறியிருக்கின்றனர். இதனால் கள்வர்களின் பயம் ஏதுமின்றித் தாம் நிம்மதியாகத் தூங்கியதாகவும் கூறுகின்றனர். ஏமம், சாமம் முதலான அகால வேளைகளில் இவ்வாலயம் அமைந்த வீதியாற் கூட எவரும் செல்லமுடியாத அளவுக்குக் காவல் இருந்தது. மது அருந்திவிட்டோ, புகைத்துக் கொண்டோ, மாமிசம் புசித்துவிட்டோ வேறு தொடக்குடனோ ஆலயத்திற்கு அருகிற் கூடச் செல்ல முடியாது.

ஒரு தடவை எமது கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த முகிழ்நிலை ஆசிரியர் ஒருவர் கொத்துறொட்டி சாப்பிட்டபின்னர் முடிமன்னர் ஆலயத்தில் தூங்கிய சில நிமிடங்களில் பைத்தியம்பிடித்தவர் போலப் புலம்பித் திரிந்து, மறுநாள் உண்மை நிலைமையினை உணர்ந்து பலவாறு முடிமன்னரை மன்றாடி மன்னிப்புக் கேட்டு வணங்கித்தான் நிவாரணம் பெற்றமை பலரறிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே இவ்வாலயத்தின் தல விருட்சமான வேம்பினை அறியாமல் வெட்டியவருக்கு நடுக்கத்துடன் கூடிய நோய் ஏற்பட்டு அதற்கும் பிராயச் சித்தம் செய்து பிழைத்தார்.

முடிமன்னர் ஆலயத்தை நீக்கிவிட்டு அவ்விடத்தில் வித்தக விநாயகரை பிரதிட்டை செய்ய எட்டுத் தடவைகள் எடுத்த முயற்சியின் பின்னர் அருட்கவி விநாசித்தம்பிப்புலவரின் ஆலோசனையுடன் முடி மன்னருக்குத் தனியாகவும் வித்தக விநாயகருக்குத் தனியாகவும் கோயில் எடுக்கப் பெற்றது. முடிமன்னர் ஆலயத்தைப் பெயர்த்திருந்திருந்தால் பேராபத்தை அதனைச் செய்தவர்கள் சந்தித்திருக்க நேரிட்டிருக்கும் என்று புலவர் கூறியிருந்தாராம்.

கல்வியியற் கல்லூரி நிர்வாகம் மிகவும் சட்டதிட்டங்களுடன் கூடியது. கல்லூரியைச் சுற்றி பெரிய மதில் கட்டப்பெற்று முடிமன்னர் ஆலயம் கல்லூரி வளாகத்தினுள் அமைந்திருந்தாலும் வழமையாக நம்பி வழிபாடு செய்தவர்கள் ஆலயத்தின் பின்புறமாகக் கர்ப்பூரம் கொழுத்தி, மலர்தூவி பொங்கல் செய்து வழிபாடு செய்வதைப் பார்க்கும் போது முடிமன்னர் தெய்வம் அம்மக்களுடைய வாழ்வியலில் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ளார் என்பது நன்கு தெரிகிறது. எடுத்துக்காட்டாக பல ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட இடப்பெயர்வினால் இப் பிரதேசத்தில் குடிசன நெருக்கம் இல்லாத சூழ்நிலையில் வெளிநாடொன் றிற்குச் செல்லவேண்டிய குடும்பஸ்தர் ஒருவர் முடிமன்னரே தனது குடும்பத்துக்குக் காவலாக இருக்கவேண்டுமென்று நேர்த்தி வைத்து விட்டுச் சென்றிருக்கிறார். அப்படி அவர் வெளிநாட்டுக்குச் சென்ற காலத்திலிருந்து அவரது குடும்பத்திற்கு எவ்வித இடர்பாடுகளோ, ஆபத்துக்களோ நேராதவகையில் காத்த தெய்வமாக முடிமன்னர் விளங் கினார். இதனால் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்த அவர் முடிமன்னர் செய்த அற்புதத்தை எம்மிடம் மனமுருகிக் கூறி நேர்த்திக் கடனை நிறைவேற்றியமை பலரறியாதது.

இப் பிரதேசத்தில் மேற்குறிப்பிட்டவரைப் போன்றோரது உளத் தூய்மையானதும் இடையறாததுமான உயர்ந்த வழிபாடுகளினால் முடிமன்னர் இப்போதும் பலருக்குப் பலவிதமான தோற்றங்களில் காட்சி கொடுத்தும் தோன்றாத்துணையாகவும் இருந்து அருள் புரிந்து கொண்டி ருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழநாட்டில் வயிரவர் வழிபாடு

**பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை**
சான்பிரான்சிஸ்கோ
அமெரிக்க ஐக்கிய நாடுகள்



சைவசமயத்திலே, கா - என்ற வினையடியாகப் பிறக்கும் காத்தல், காப்பு, காவல் என்ற மூன்று தொழிற்பெயர்களுள் ஒவ்வொன்றுக்கும் உரியவராக, ஒவ்வொரு தெய்வம் கூறப்படுகிறது. காத்தல் திருமாலின் தொழிலாகவும், காப்பு விநாயகரின் தொழிலாகவும், காவல் வயிரவரின் தொழிலாகவும் கூறப்படுகிறது.

வயிரவர் வழிபாடு காலத்தால் மிகவும் பழையது. வயிரவரை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் பைரவமும் பழைய சமயங்களுள் ஒன்றே. சிவபெருமானுக்கும் வயிரவருக்கும் உள்ள தொடர்பிலும் ஒரு தெளிவின்மை நிலவி வருகிறது. சிவபெருமானுடைய ஒரு மூர்த்தமே வயிரவரென்றும், .சிவபெருமானுடைய இரண்டாவது மகனே வயிரவ ரென்றும், சிவன்கோவில் காவலரே வயிரவரென்றும் மூன்று கருத்துக்கள் நிலவுகின்றன.

வேதங்களிலே கூறப்படும் உருத்திர வழிபாடே காலப்போக்கிலே சிவ வழிபாடாக மலர்ந்ததென்பது வைதிகர்களின் நம்பிக்கை. உருத்திரன் அச்சத்தைத் தோற்றுவிக்கும் அழித்தல் தொழிலுக்குரிய தெய்வமாக வேதங்களிலே கூறப்பட்டுள்ளான். வயிரவர் அச்சத்தைத் தோற்றுவிக்கும் தெய்வமாகவே என்றும் இருந்து வருகிறார். முத்தலைச் சூலமாகிய திரிசூலம் சைவசமயத்தவர்களுக்கும் வயிரவ வழிபாட்டினர்க்கும் மிகவும் புனிதமான அறிகுறியாகும். சிவ வழிபாடு, வயிரவர் வழிபாடு என்பன இரண்டிலும் வேடுவர் வாழ்க்கைக் கூறுகளும் கலந்துள்ளன. சிவ பெருமான் வேடராக வந்தே அருச்சுனனுக்கு அருள்செய்து பாசுபதம் வழங்கினார் என்பது மகாபாரதக்கதை. வயிரவரும் நாயோடு வேட்டைக் குப் போபவர் போலவே காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிரவர் வழிபாடு மிகப் பழையதாயினும், வயிரவர் பற்றி இலக்கியங்கள் மிகக்குறைவாகவே எழுந்துள்ளன. சைவத்திருமுறைகளிலும் கந்தபுராணம் முதலியவற்றிலும் வயிரவரைப் பற்றிப் பல குறிப்புக்கள் காணப்படுகின்ற போதிலும், வயிரவரைப்பற்றித் தனி இலக்கியங்கள் தமிழிலே எழவில்லை. வயிரவர் வழிபாடு தனிக் கோவில்களிலே நிகழ்ந்து வந்தமை பற்றிய குறிப்புக்களைத் தமிழ்ச் சாசனங்களிலும் காணக்கூடவில்லை. வயிரவர் வழிபாடு தமிழ்நாட்டுக்கு வடக்கிலிருந்தே வந்ததாக இருக்கவேண்டும். வயிரவருக்கு வடுகன் என்றொரு பெயர் உண்டு. வடுகவயிரவர் என்ற வழக்கும் உண்டு. வடுகு என்பது தமிழ்நாட்டுக்கு வடகிழக்கில் அமைந்துள்ள ஆந்திரப் பிரதேசத்தைக் குறிக்கிறது என்பது பொதுவான அபிப்பிராயம். வடுகு என்பது தமிழ்நாட்டுக்கு வடமேற்கில் அமைந்துள்ள கருநாடகத்தைக் குறிப்பதாகப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் கூறியுள்ளார். எவ்வாறாயினும் வடுகு என்பது வடக்கு என்பதனோடு தொடர்புடையதே என்று கூறலாம். வயிரவர் என்பது வடமொழிப் பெயர். வயிரவருக்குத் தமிழ்ப்பெயர் எதுவும் இருப்பதாகத் தெரியவரவில்லை.

வயிரவர் வழிபாடு இன்றைய ஈழநாட்டிலே பயின்று காணப்படுகின்றது. இது தொடங்கிய வரலாறு, வளர்ந்து வந்த வரலாறு, அறியுமாறில்லை. பெருந் தெய்வங்களின் கோவில்கள் அழிக்கப்பட்டுச் சைவ வழிபாடு தடைசெய்யப்பட்ட போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களிலே சிறு தெய்வ வழிபாடாக வயிரவ வழிபாடு பரவியிருக்கவேண்டும் என்றொரு கருத்து சிலரால் முன் வைக்கப்படுகின்றது.

ஈழநாட்டிலே வயிரவர் வழிபாடு ஓரளவுக்காவது நீண்ட காலமாக இருந்திருக்கவேண்டும் என்று நம்ப இடம் இருக்கிறது. வயிரவர் ஒரு போர்க்கடவுள். வயிரவருக்குச் சிறப்பான நாள் மங்கலவாரம் என உபசாரமாக வடமொழியிலே கூறப்படும் செவ்வாய்க்கிழமையாகும். செவ்வாய்க்கிழமை கலகம், சண்டை, போர் முதலியவற்றைக் குறிக்கும் நாள் என்பது அனைத்துச் சோதிட நூல்களினதும் கணிப்பாகும். தைமாதத்துச் செவ்வாய்க்கிழமை வயிரவருக்குச் சிறப்பாக உரியது. வயிரவருக்குச் சிறப்பாக உரிய நட்சத்திரம் பரணியாகும். சித்திரைமாதப் பரணியும் ஐப்பசிமாதப் பரணியும் வயிரவருக்குச் சிறப்பாக உரியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணிப் பிரபந்தம் என்பது சோழப் பெருமன்னர் காலத்திலே தோன்றத் தொடங்கிய போர்ப் பிரபந்த வகையாகும். போருக்கு உரிய செவ்வாய்க் கிரகம் பரணிக்கு உரிய மேடராசியிலே ஆட்சி பெறுகிறது.

பெரிய புராணத்திலே இடம்பெறும் சிறுத்தொண்டநாயனார் புராணத்திலே, சிவபெருமான் வயிரவக் கடவுள் வேடத்திலே சிறுத் தொண்டரிடத்து வந்ததாகச் சேக்கிழார் கூறியுள்ளார். சிறுத்தொண்டரின் வழிபடு கடவுள் வயிரவர் என்று கருதத்தக்க வகையிலே சேக்கிழார் கதையை நடத்திச் செல்கிறார். சிறுத்தொண்டர் பரஞ்சோதி என்ற பெய ரிலே நரசிம்மவர்ம பல்லவனுக்குப் படை நடத்தி, "வாதாபிகொண்டான்" என்று பெரும்புகழ் பெற உதவினார். இக்குறிப்பினை நோக்கும்போதும், போர்வீரர் வழிபடுகடவுளாக வயிரவர் விளங்கியிருக்கிறாரென்று கொள்ள இடம் இருக்கிறது.

இலங்கைத் தமிழர்களுள் ஒரு பகுதியினர் தமிழ்நாட்டிலிருந்து வந்த படைவீரர்களின் பரம்பரையினராக இருக்கவேண்டும். இலங்கை வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து, கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை, தமிழ்நாட்டு அரசுகள் இடையிடை இலங்கைமேற் படையெடுத் துள்ளன. இலங்கை மன்னர்கள் சிலர் தமிழ் நாட்டிலே படைதிரட்டிவந்து, இலங்கை அரசுரிமைப் பிரச்சினைகளைத் தீர்த்துள்ளனர். இவ்வாறு இலங்கைக்கு வந்த படையினருள் ஒரு பகுதியினராவது இலங்கையிலே நிரந்தரமாகத் தங்கியிருப்பர் என்று கொள்வது வரலாற்று நியதிக்கு ஏற்புடையது. இந்தப் பரம்பரையினரின் வழிபாட்டுத் தெய்வமாக வயிரவர் இருந்திருப்பார். அண்மைக்காலம் வரையிலே திரிசூல வடிவிலே வழிபடப்பட்டு வந்த வயிரவருக்கு இப்பொழுதே விக்கிரக வழிபாடு பரவலாகி வருகிறது. திரிசூல வழிபாடு, படைவீரரிடையிலும் படைவீரர் பரம்பரையிலும் நிலவிய ஒருவகை ஆயுத வழிபாடு என்று கூறலாம்.

வயிரவர் மண்டையோடுகளை மாலையாக அணிந்தவராகவும் பிரமனுடைய தலைகளிலே ஒன்றைக் கிள்ளியவராகவும் மண்டை யோட்டிலே குருதிப் பலிகொள்பவராகவும் சித்திரிக்கப்பட்டுள்ளார். காபாலிகர்களுடைய இட்ட தெய்வங்களிலே வயிரவர் முக்கியமானவர். பண்டைத்தமிழகத்திலே கொற்றவையும், பின்பு துர்க்கையும் பெற்ற வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டை வயிரவரும் அவருடைய சக்தியாகிய காளியும் பெறத்தொடங்கி யுள்ளனர். வயிரவர் கோவில்களிலே மிருகபலி இடம்பெற்று வந்தது ஆச்சரியத்துக்குரியது அல்ல. காலப்போக்கிலே மிருகபலி நிறுத்தப்பட்டு வடைமாலைபோடுதலும் சைவ உணவு மடைபோடுதலும் வழக்கமாகி யுள்ளன. ஒன்றிரண்டு வயிரவர் கோவிலில் மட்டும் மிருகபலி இடம்பெறுவ தாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. வயிரவரைக் கோவிற் பாது காவலராக, ஊர்க்காவலராகக் காணும்நிலை இத்தகைய வழிபாட்டு முறையிலிருந்து தோன்றியிருக்கவேண்டும்.

சிவபெருமானிலிருந்து வேறாகாதவராகவும் சிவபெருமானுடைய மகனாகவும் வயிரவரைக் காண்பவர்கள் வயிரவர் வழிபாட்டை ஓர் உயர்நிலைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்திலே குறிப்பிடப்படும் எண்பது ஈழநாட்டு வயிரவர் கோவில் களிலே, அரைவாசிக்குச் சற்று அதிகமானவை, ஞானவயிரவர் கோவில் என்று கூறப்படுகின்றன. ஞானம் அடைமொழியாகி முதன்மை பெற்றதும் வயிரவர் சிவபெருமானுடைய நிலைக்கு உயர்ந்துவிடுகிறார். ஞான வயிரவர் கோவல்களிலே அந்தணர் பூசை செய்யப் பின் நிற்பதில்லை. ஞானவயிரவர் என்பதற்கு வேறு அடைமொழிகளும் வழங்கப்படுவது உண்டு. சிவஞான பயிரவர் என்று பெயரிலேகூட சிவபெருமானை வயிரவரோடு ஐக்கியப்படுத்தும் நிலை, நல்லூர், கட்டுடைவளவு, தையிட்டிச் சாம்பூர் முதலிய இடங்களிலே காணப்படுகிறது. ஞானவயிர வரைக் குழந்தையாகக் கண்டு பாலஞான வயிரவர் என்று போற்றும் முறைமை கொட்டடியிலே காணப்படுகிறது. ஞான வயிரவர் கோவில்கள் அனைத்தும் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்தவை போலக் காணப்படு கின்றன.

எஞ்சிய வயிரவர் கோவில்களுள்ளே, மூன்றில் இரண்டுபகுதி எவ்வித அடைமொழியும் இன்றி வெறுமனே வயிரவர் கோவில் என்று வழங்குகின்றன. வயிரவ வழிபாட்டிலோ மாற்றத்தை விரும்பாததனாற் போலும், சிலர் ஆதிவயிரவர் என்ற பெயரை வழங்குவதைக் கேரன்கமத் திலும் தெல்லிப்பழைத் துவாளையிலும் காணலாம். சூலவயிரவர் என்பது சூலவடிவத்திலே வழிபடப்படுவதனாலும், சடை வயிரவர் என்பது சடையையுடையவராக வயிரவர் விளங்குவதனாலும் வந்த பெயர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகலாம். மாணிக்க வயிரவர், சந்நாசிவயிரவர், சோலைவயிரவர் என்ற பெயர்களுக்கும் பொருத்தமான காரணங்கள் காணப்படவேண்டும். எட்டு நரசிங்க வயிரவர் கோவில்கள் காணப்படுகின்றமை இவ்விடத்திலே சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டும். நரசிம்ம அவதாரம் எடுத்து இரணியனது இரத்தத்தைக் குடித்த திருமால் மதங் கொண்டவர்போலத் திரிந்தபோது, அந்த நரசிம்மத்தைப் பிளந்து அழித்தவரே நரசிங்க வயிரவர். நரசிங்க வயிரவர் கோவில்கள் வவுனியா மாவட்டத்திலுள்ள புளியங்குளத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளிய வளையிலும் ஒவ்வொன்று காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள், தென்மராட்சியில் மட்டும் மூன்று நரசிங்கவயிரவர் கோவில்கள் கச்சாய், மீசாலை, தனங்களப்பு என்னுமிடங்களிலே உள்ளன.

வயிரவர் கோவில் போலப் பெருந்தொகையாக இல்லாதுவிடினும், வீரபத்திரர் கோவில்கள் சிலவும் ஈழநாட்டிலே காணப்படுகின்றன. வயிரவருக்கும் சிவபெருமானுடைய மூன்றாவது மகனாகச் சிலராற் கொள்ளப்படும் வீரபத்திரருக்கும் சில ஒப்புமைகள் உண்டு. வீரபத்திரருடைய சக்தியாகிய பத்திரகாளிக்குத் தனிக்கோவில்களும் சில உள. சாவகச்சேரி கோவிற்குடியிருப்பில் மட்டும் வீரபத்திரர் ஞான வீரபத்திரர் என்று கூறப்படுகின்றார். ஞானவயிரவர் கோவில்கள் நாற்பதுக்கு மேலே காணப்படுகின்றமையால், அவற்றின் செல்வாக்காலேயே ஞான வீரபத்திரர் என்ற பெயர் தோன்றியதெனக் கொள்ளவேண்டும்.

வயிரவர் என்ற போர்க்கடவுளுக்கு வீரத்தையும் வேகத்தையும் ஞானம் என்ற அடைமொழி கொடுத்துக் குறைத்ததற்கு எதிர்மாறான மாற்றம் ஒன்றும் ஈழநாட்டிலே நிகழ்ந்துள்ளது. ஈழநாட்டிலே பிள்ளையார் கோவில்களே அதிகம் என்று சொல்லத்தக்க அளவுக்குப் பிள்ளையார் கோவில்கள் நிறைந்து காணப்படுகின்றன. இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்திலே குறிப்பிடப்பட்ட கோவில்களுட் பெரும்பாலன பிள்ளையார் கோவில்களே. விவசாயிகள் விரும்பிப் போற்றும் கடவுள் விநாயகர் என்றே கூறலாம். ஈழநாட்டுக்குக் கிராமங்கள் பலவற்றிலே, பிள்ளையார் கோவில்களே பிரதான கோவில்களாக விளங்குகின்றன. கந்தபுராண கலாசாரத்தின் வளர்ப்புப் பண்ணைகளாக விநாயகர் கோவில்கள் பல விளங்கி வருகின்றன. விநாயகர் பொதுவாகச் சாந்தசொரூபியாகக் காணப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார். வயிரவர் வழிபாட்டின் செல்வாக்கினாலே, விநாயகருக்கு வீரம் ஏற்றப்பட்டிருக்கிறது போலத் தோன்றுகிறது. பதினைந்து கோவில்களில் உள்ள பிள்ளையார் வீரகத்திப் பிள்ளையார் அல்லது வீரகத்திவிநாயகர் என்று பெயர் பெற்றுள்ளமையைக் காணலாம். வீரகத்திப்பிள்ளையார் கோவில்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே பெரும்பாலும் காணப்படு கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்திலும் வீரகத்திப்பிள்ளையார் கோவில் ஒன்று உண்டு.

வயிரவர் சைவசமயக் கோவில்களிலேயே காவல் தெய்வமாக இடம்பெறுகிறார். பிரமனை ஒரு தலைகிள்ளித் தண்டித்த பின்பு, வைகுண்டத்துக்குப் போய்த் திருமாலிடம் இரத்தப்பலி வயிரவர் கொண்ட மையைக் கந்தபுராணம் தக்ஷ காண்டம் ததீசி உத்தரப்படலத்திலே காணலாம். நரசிங்க வயிரவரும் திருமாலின் நரசிம்ம அவதாரத்தைக் கீறிப் பிளந்தவரெனக் கூறப்படுகிறது. அதனால் திருமால் கோவில் களிலே வயிரவரைக் காவலுக்கு நிறுத்தும் வழக்கம் இல்லை. அனுமாரே திருமால் கோவில்களிலே காவலுக்கு நிற்கிறார். வயிரவரையும் அனு மாரையும் ஒரே தலத்தில் வைத்து வழிபடுவது அருமை. புலோலி தெற்கி லுள்ள கணை வயிரவர் கோவிலிலே, வயிரவரும் அனுமாரும் அக்கம் பக்கத்தில் வைத்து வழிபடப்படுகின்றனர். கணைவயிரவர் கோவிலிலே அனுமார் இடம்பெறுவதற்கு வல்லிபுர ஆழ்வார் கோவிலின் செல்வாக்குக் காரணமாக இருக்கவேண்டும்.

கந்தபுராணச் செய்தியின்படி, சிவபெருமானைப் போல வயிரவருக்கும் முக்கண்ணும் நான்கு கைகளும் சடைமுடியும் திரி சூலமும் உண்டு; உமாதேவியாரைப் போன்ற நீலநிறம் அவருக்கு வாய்த் தது. யானைத்தோலை ஆடையாக உடுத்த அவர் பாம்புகளை அணி கலன்களாகக் கொண்டிருந்தார். பெருந்தொந்தி, கடைவாயில் கோரப் பற்கள், அகன்ற மூக்குத்துவாரங்கள் என்பனவும் அவருடைய அம்சங்க ளாகக் கூறப்படுகின்றன. வயிரவரும் சிவந்த மேனியர் என்று திருமந்திரத் திலே கூறப்பட்டிருப்பது, அவரைச் சிவபெருமானுடன் இனங்காண மேலும் உதவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிரவர் பரிவாரமூர்த்தி என்ற நிலையிலே, எல்லா மண்டபங்களும் கடந்து, கோவிலின் உட்புறத்திலே வடக்கிற்கும் வடகிழக்கிற்கும் இடையில், இறைவன் சந்நிதியை நோக்கியவாறு, வீற்றிருப்பார். பாதுகாவல் தெய்வம் என்ற முறையிலே, கோவிலின் திறப்பு ஒப்புவிக்கப் படுவது உண்டு. அதனால், முதற்பூசையும் இறுதிப்பூசையும் இவருக்கே நடப்பது உண்டு. பெருங்கோவில்களிலே மகோற்சவம் தொடங்க முன்பும் மகோற்சவம் முடிந்தபின்பும், பரிவார மூர்த்தியாகிய வயிரவருக்கு மடை போடப்படும் வழக்கம் உண்டு. புதிதாகக் கோவில் கட்டும்போது பிரதிஷ்டை செய்யும்போதும் உற்சவ காலத்திலும், வயிரவரை முன்நிறுத்திக் கிராமசாந்தி செய்வது மரபு. வயிரவர் பெருந்தெய்வமாகவும் சிறுதெய்வமாகவும் வழிபடப்படும் நிலை ஈழநாட்டிலே தொடர்கிறது.


**உசாத்துணை**

* சித்திரமேழி அருள்மிகு ஞானவயிரவர் கோவில் மகாகும்பாபிஷேக மலர், இளவாலை, 1981

* சுப்பிரமணியம், செல்வி. சாந்தி - யாழ்ப்பாணத்தில் வயிரவர் வழிபாடு, சித்திரமேழி வைத்திலிங்கம் துரைசிங்கம் நினைவு வெளியீடு, இளவாலை, 1986.

* வெங்கடேச ஐயர். இ. - (இரகுநாதையர்) சுக்கில வருஷ வாக்கிய பஞ்சாங்கம், சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில். 1989 - 90




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உளநலம் பேண உதவும் ஆன்மிக செயற்பாடுகள்

**மா. பிரபாகரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
காப்பாளர், இந்துமன்றம்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

இறை நம்பிக்கை உலகில் உள்ள ஒவ்வொருவரிடமும் வேரோடியுள்ளது. ஒவ்வொரு மதமும் வெவ்வேறு வடிவங்களில் மதக் கோட்பாடுகளைக் கூறினும், அடிப்படைக் கொள்கையில் வேறுபாடு களைக் காண்பது மிக்க கடினமாகவே உள்ளது. அனைத்துக் கோட்பாடு களும் மனிதனை பண்புள்ளவனாக ஆக்கவும் அவனை ஓர் மேலான உயிரி என்ற நிலையில் இருந்து தெய்வத்தின் ஸ்தானத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு வழிகாட்டியாகவே காணப்படுகின்றது. இந்துமதக் கோட்பாடுகளும் இதனையே தெளிவாக இயம்பி நிற்கின்றன. தெய்வீக நிலையினை மனிதன் அடைவதற்கு பல படிநிலைகளைத் தாண்டிச் செல்லவேண்டியுள்ளது.

இதன் முதல்படி ஒரு மனிதன் ஓர் ஆரோக்கியமான மனிதனாக வாழ்வதாகும். ஆரோக்கியம் எனும்போது உடல், உள சமூக நலமுடன் வாழும் முறையைக் குறிப்பிடலாம்.

இம்மூன்று நலக்கூறுகளும் சம முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படினும் உளநலம் என்பது மற்றைய இரண்டு நலன்களிலும் மிகுந்த செல்வாக்குச் செலுத்தும் ஒரு மேலான அடிப்படைக் காரணியாக விளங்குகின்றது.

நவீன உலகில் திருப்திகரமான ஒரு பூரண வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் மிக மிகச்சிலரே. மறுதலையாகக் கூறின் அனேகமான மனிதர்கள் மனக்குறைகளுடன் அல்லது உளநலக் குறை பாடுடையவர்காளகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்; வாழ்ந்தும் முடிக்கின்றனர்.

தனிமனிதனது உளப்பிரச்சினைகள் ஓர் உள சமூகப்பிரச்சினை யாகவே காணப்படுகின்றன. ஒரு சமுதாயத்தின் மக்கள், அச்சமுதாயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் பண்பாடு, ஒழுங்குகள், நம்பிக்கைகளுக்கு அமைய வாழ்கின்றனர். மாறாக சமுதாயத்தை அமைக்கும் இம்மக்களே அதன் ஒழுங்குகளையும், நியமங்களையும் மாற்றியமைக்கக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர்.

தனிநபர், குடும்பம், சமூகம் என்பவற்றிற்கிடையேயான ஆரோக்கியமான நெருங்கிய தொடர்பு ஒருவரின் உளநல மேம்பாட்டிற்கு உறுதுணையாயமைகின்றது. மேற்கூறிய மூன்றில் ஏதாவது ஒரு காரணியில் ஏற்படும் பிரச்சினை மற்றையவற்றில் செல்வாக்குச் செலுத்தும் வேளையில், தனிநபர், குடும்பம், சமூகம் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்தே பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கின்றன.

தற்கால உலகில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களால் ஒருவன் தனது குடும்பம், சமுதாயம், ஊர் என்ற ஆரோக்கியமான வட்டத்தில் இருந்து படிப்படியாக தனிமைப்படுத்தப்படுகின்றான். இதன் விளைவாக அவனுக்கு முன்னால் உள்ள அனைத்து சவால்களையும் தனித்து நின்றே முகம்கொடுக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படுகின்றான்.

இச்சவால்கள் பலவற்றை வெற்றிகரமாகத் தீர்க்கும் பலர், தீர்க்க முடியாத ஒருசில பிரச்சினைகளைத் தொடர்ச்சியாக எதிர்கொள்வதனால், உளநலம் சிதைவடைந்து நெருக்கீடுகளுக்கு உள்ளாகின்றனர்.

சில நெருக்கீடுகள் சாதாரணமானவை. நெருக்கீடொன்றிற்கு ஒருவர் ஆளாகும்போது, அவர் இயற்கையாகவே அதனை எதிர்கொண்டு, அதிலிருந்து தம்மைப் பாதுகாத்து தப்பித்துக்கொள்ள முனைவார். இதன்போது தசைகள் இறுக்கமடையும்; சுவாச இதயத்துடிப்பு வீதங்கள் அதிகரிக்கும். நெருக்கீடு நீங்கியதும் தசைகள் தளர்வுற்று சுவாசம், இதயத்துடிப்பு என்பன சீராகும். பழைய நிலையை அடைந்து அமைதியும் ஓய்வும் அடைவர். அனேகமானவர்களில் இந்நிலைமை சாதாரணமாக நிகழும்.

இவற்றைவிட வேறுபட்ட நெருக்கீட்டு நிலைமைகளான உறவினர்களின் ஆதரவு கிடையாமை, எதிர்கால வாழ்க்கையினைச் சூனியமாக எண்ணுதல் போன்றவை அடிக்கடி தொடர்ந்து கவலையை ஏற்படுத்துகின்றன. இந்நிலைமையானது தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்று தசை இறுக்கத்திற்கு வழிவகுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நெருக்கீட்டிற்குள்ளானவர்களின் குணங்குறிகளாக; சினம், அந்தரம், ஸ்திரமற்ற மனநிலை, யோசனை, தமது பிரச்சினையை தெளிவாக விபரிக்க முடியாமை என்பன காணப்படும். இதனால் களைப்பு, தலையிடி, பசியின்மை, கை, கால், நெஞ்சு நோ, பெண்களில் மாத விடாய்க் கோளாறு, ஆண்களில் பாலியலில் நாட்டம் குன்றுதல் என்பன ஏற்படும். அத்துடன் சக்திகுறைதல், செயற்பாடு குன்றுதல், போதைக்கு அடிமையாதல், நித்திரைக் கோளாறு போன்ற நடத்தை மாற்றங்களும், வாக்குவாதம், உடன்பாடின்மை, புரிந்துணர்வின்மை போன்ற சமூக உறவுப் பிரச்சினைகளும் தோன்றும்.

இவ்வாறான பல்வேறு சிக்கலான உளப்பிரச்சினைகளையும் தீர்க்கும் அருமருந்தாக இந்துமத அனுட்டானங்களும் ஆன்மீக செயற் பாடுகளும் காணப்படுகின்றன.

"ஊர்கூடி தேர் இழுத்தல்" என்ற செயற்பாடானது ஊர்மக்கள் அனைவரும் தமது முரண்பாடுகளைக் களைந்து ஒரு நோக்கை அடைவதற்கு ஒருங்கிணைந்து செயற்பட வழிவகுக்கின்றது. தம் உடலை வருத்திச் செய்யும் அங்கப்பிரதட்சணம், அடியளித்தல், காவடி எடுத்தல் என்பன தீராத பிரச்சினைகள், கவலைகள், குற்ற உணர்வுகளில் இருந்து விடுபடவும், எதிர்காலம் பற்றிய நம்பிக்கை ஒளியினை ஏற்படுத்தவும் உதவுகின்றன. இதன் காரணமாக குறைவடைந்திருந்த உற்சாகம், செயற் றிறன் என்பன உத்வேகம் பெற்று தொழிற்பட ஆரம்பிக்கும்.

இவ்வாறான ஆன்மீக செயற்பாடுகள் அனைத்தும் ஒமோன் களின் சுரப்பினை ஒழுங்கமைத்து, சீரான உடலியற் தொழிற்பாட்டிற்கு உந்துசக்தியாக அமைகின்றன.

இதனைவிட இலகுவான சாந்த வழிமுறைகள் இந்து மதத்தில் காணப்படுகின்றன. இவற்றை எல்லோரும் இலகுவாகக் கடைப்பிடிக்க முடியும். அவையாவன சுவாசப்பயிற்சி (பிரணாயாமம்) சாந்தியாசனம், மந்திர உச்சாடனம், தியானம் ஆகும்.

**சுவாசப்பயிற்சி (பிரணாயாமம்)**

மன அமைதியற்ற நிலையில் சுவாசமானது ஒழுங்கற்றதாகவும், ஆழமற்றதாகவும் காணப்படும். இதனால் உடல்ரீதியாகப் பல மாற்றங் கள் ஏற்படும். சுவாசத்தை ஒழுங்காகவும், ஆழமாகவும் நெறிப்படுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனால் மேற்குறிப்பிட்ட உடல், உள மாற்றங்களை எதிர்த்து மனச் சாந்தியை உண்டாக்கலாம்.

இப்பயிற்சியின் போது இறுக்கமற்ற ஓர் ஆசனம் அல்லது இருக்கையைத் தெரிவு செய்தல் அவசியம். இதற்குப் பத்மாசனம் அல்லது சித்தாசனம் அல்லது தத்தமக்கு ஏற்றவாறு வசதியான இருக்கையைத் தெரிந்து எடுத்து (உதாரணமாக ஒரு கதிரையில் இருந்துகொண்டு, படுக்கையில் படுத்தபடி) தளர்வான சாந்தமான நிலையிலிருந்து கொண்டு, சுவாசம் உட்செல்வதனையும் வெளிவருவதனையும் சில விநாடிகள் அவதானிக்கவும்.

பொதுவாக நாம் சுவாசிக்கும்போது எமது மார்புப் பகுதி பாவிக்கப்படுவதனை உணரலாம். ஆனால் இப்பயிற்சிக்கு வயிற்றுப் பகுதியைக் கூடுதலாகப் பாவிக்கப் பழகுதல் நன்று. வயிற்றுப் பகுதித் தசைகளும், மார்புத் தசைகளும் விரிவடைவதனால் காற்று உட்செல் வதனை அவதானிக்கலாம். சுவாசத்தை உள்ளெடுக்கும்போது மெதுவாக வும், தொடர்ச்சியாகவும், ஆழமாகவும் எடுக்கவும். பின்னர் வயிற்றுப் பகுதித் தசைகளையும், மார்புத் தசைகளையும் தளர்வடைய விடுவதனால் வெளிச்சுவாசம் தானாகவே இலகுவாக வெளியேறும். இதனை ஆறுதலாகவும், மெதுவாகவும் செய்யவும். இந்த வேளைகளில் வேறு சத்தங்கள் குழப்பாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும். இப்படிச் சுவாசம் உட்புகுவதனையும், வெளியேறுவதனையும் சில தடவைகள் அவதானிக்கவும். படிப்படியாக, வயிற்றுப் பகுதியைக் கூடுதலாக உபயோகித்து சுவாசிக்கப் பழகிக்கொள்ளவும்.

இதன்பின் மூச்சை உள்ளெடுக்கும்பொழுது ஒன்றிலிருந்து மூன்றுவரையும் ஒழுங்காக மனதினுள் எண்ணவும். பின்பு, மூச்சை வெளிவிடும் பொழுதும் இதேபோன்று மனதினுள் எண்ணவும். படிப்படி யாக உள்ளெடுக்கும் நேரத்தையும் வெளிவிடும் நேரத்தையும் உங்களால் முடியுமான அளவுக்கு அதிகரிக்கவும். எண்களுக்குப் பதிலாக சொற் களை (மந்திரங்களை) மனதினுள் உச்சரிக்கலாம். எளிமையாக, ஓம் எனும் பிரணவ மந்திரத்தை உபயோகிக்கலாம். "ஓ" என்று மனதினுள் உச்சரித்தபடி மூச்சை உள்ளெடுத்து "ம்" என்று உச்சரித்தபடி வெளி விடலாம். நீங்கள் விரும்பினால் ஒரு குருவின் வழிநடத்தலின்கீழ் குறிப் பிட்ட நேரத்திற்கு மூச்சை உள்ளெடுத்து, மூச்சை உள்ளடக்கி, பின் மூச்சை வெளிவிடலாம். (முறையே 1:4:2 என்ற நேரவிகிதம் அல்லது அதன்கூட்டல் விருத்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாந்தியாசனம்**

**படிப்படியாகத் தசைகளைத் தளரச்செய்யும் பயிற்சி**

நெடுக்கீடு நிலைகளில் தசைகளின் இறுக்கம் தொடர்ந்து இருப்பதனால் உடல் ரீதியாகச் சில அறிகுறிகள் தோன்றலாம். உதாரண மாக தலையிடி, கபாலக்குத்து, பிடரி, கழுத்து நோ, களைப்பு. மேலும், உளரீதியாகப் பயம், பதற்றம், அந்தரம், திடுக்கிடுதல் போன்ற அறிகுறிகள் தென்படலாம்.

இவ்வுள மாற்றங்களிலிருந்து விடுபடப் பின்வரும் அப்பியாசத் தினைச் செய்து ஒரு தளர்வான அமைதியினை உருவாக்கலாம்.

ஒரு விரிப்பில் அல்லது படுக்கையில் மல்லாந்து படுத்துக்கொள் ளவும். கால்களை நீட்டியபடி, கைகளைப் பக்கங்களில் வைத்து, விரல் களை அகட்டியவாறு, கண்களை மூடிச் சுவாசத்தை மேற்கூறியவாறு மெதுவாக, அவசரமின்றி எடுத்துவிட்டபடி (முன்குறிப்பிட்ட சுவாசப்பயிற்சி யைச் செய்யலாம்) உணர்வற்ற பிரேதம் போலக் கிடக்கவும். கால்விரல் களில் ஆரம்பித்துப் படிப்படியாக தலை வரையும் ஒவ்வொரு அங்கமாகச் சரீரத்தைத் தளர்த்தி விடவும். இதற்காக முதலில் மனதைக் கால்விரல் களுக்குச் செலுத்தவும். "என் கால் விரல்கள் இளகி இருக்கின்றன. சாந்தி, சாந்தி, சாந்தி" என்ற எண்ணத்துடன் கால் விரல்களைத் தளரவிடவும். அடுத்ததாகப் பாதங்களுக்கு உணர்வைச் செலுத்தியபடி "என் பாதங்கள் இளகி இருக்கின்றன. சாந்தி, சாந்தி, சாந்தி" என்று மனதிற்குள் சொல்லியபடி பாதங்களைத் தளர்த்தவும்.

இப்படி ஒவ்வொரு அங்கமாக காலில் இருந்து தலை வரையும் (கால்விரல்கள், பாதங்கள், கணுக்கால்கள், முழங்கால்கள், தொடை, ஆண்-பெண் குறி, மூலம், நாரி, இடுப்பு, வயிறு, மார்பு, கைகள், விரல்கள், தாடை, கழுத்து, வாய், கண், தலை, மூளை) தளர்வடையச் செய்யவும். இப்படிப் படிப்படியாகச் செய்யும்போது முன் தளர்ந்த அங்கங்களைத் திரும்ப இறுக்காது, தொடர்ந்து தளர்வுற்ற ஒரு பிரேதம் போல் இருக்க வேண்டும். ஓர் அங்கத்தை (உதாரணமாகக் கால்) மேலே தூக்கிவிட்டால், அது மரக்கட்டைபோல் விரிப்பில் விழ வேண்டும். ஒவ்வொரு அங்கத்தை யும் இளகவிடும்போது, "சாந்தி, சாந்தி, சாந்தி" என்று சொல்லும்பொழுது அல்லது எண்ணும்பொழுது ஓர் அமைதியான, ஆறுதலான நிலை உரு வாகவேண்டும். "தசைகள் இளகியிருக்கின்றன. சரீரம் அமைதியடை கின்றது, நான் சௌக்கியமாக, அமைதியுடன் இருக்கிறேன்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம் தோன்ற வேண்டும். கடைசியில், முழு உடலும் தளர்வுற்ற நிலையில், சில நிமிடங்கள் சாந்தமான மனஅமைதியை ரசிக்கவும். முடிந்தபின் திடீரென எழாது, மெதுவாக விழித்து, உணர்வுகளைத் தலையிலிருந்து கால்வரையும் செலுத்தி, அங்கங்களைச் சிறிது சிறிதாக அசைக்கவும், பின்பு எழுந்திருக்கவும்.

சாந்தியாசனம் நித்திரை கொள்வதற்கு நல்ல முறையாகும். எனவே நித்திரைக் குறைபாடுடையவர்கள் இப்பயிற்சியை மேற்கொள் வதன் மூலம் பயனடையலாம். நித்திரை கொள்வதற்காகப் படுத்தவுடன் இதனைச் செய்யலாம்.

**மந்திர உச்சாடனம்**

இம்முறையில் ஒரு சொல்லை அல்லது சொற்றொடரைத் திரும்பத் திரும்பச் சொல்வது மன அமைதியை உண்டாக்கும். உங்களுக்கு உபதேசிக்கப்பெற்ற மந்திரம் அல்லது அர்த்தமுள்ள ஒரு சொல், அல்லது வசனம், அல்லது கடவுள் நாமம், அல்லது சுலபமாக பிரணவ மந்திரமாகிய "ஓம்" என்னும் சொல்லைப் பாவிக்கலாம்.

நீங்கள் தேர்ந்தெடுத்த சொல்லை மெதுவாகத் திரும்பத், திரும்பச் சொல்லவும். (உங்களுக்கு இயலுமான முறைகள் உ-ம்: 100இற்கு மேல், சமயத்தில் 108 அல்லது அதன் கூட்டல் விருத்தி, ஒரு நாளைக்கு இரண்டு அல்லது கூடிய தடவை) இப்படிச் சில காலத்திற்குப் பின்பு, இந்த உச்சரித்தல் லேசாக வரும். சில நேரங்களில் உங்கள் கவனம் அல்லது முயற்சி இல்லாமல் உச்சாடனம் தானாக நடக்கும். அடுத்தபடியாக, உச்சரிக்கும்பொழுது சத்தமின்றி, நாவாலும் மற்றும் பேச்சுக்கு உபயோகிக்கும் தசைகளை மட்டும் பாவிக்கவும். இப்படிச் சில காலத்திற்குச் செய்யவும். அடுத்து, உள்ளே பேச்சிற்கு உபயோகிக்கும் நா முதலிய தசைகளின் அசைவின்றிச் செய்யவும். கடைசிப்படியாக, உச்சரிக்க முயற்சிக்காமல் மனதில் மட்டும் எண்ணவும்.

**தியானம்**

இதற்கு வசதிக்கேற்ப தகுந்த நேரம், இடம், ஆசனம் (இருக்கை) என்பன முக்கியம். ஆசனத்தில் முதுகெலும்பு நேராகவும், தலை நிமிர்ந்தும் இருக்க வேண்டும். நாள்தோறும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் அமைதியான, குழப்பமில்லாத சூழ்நிலையில் செய்தல் நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானிப்பதற்கு ஒரு பொருளைத் (குறி) தேர்ந்தெடுப்பது முக்கியம். உங்கள் இஷ்ட தெய்வத்தின், அல்லது ஒரு பெரியாரின் உருவத் தோற்றத்தை, அல்லது அழகான இயற்கைக் காட்சி, அல்லது தீபத்தை மனதில் வைத்துத் தியானிக்கலாம். மாறாக, மந்திர உச்சாடனத்திற்குப் பாவித்தது போல் ஒரு சொல், அல்லது சொற்றொடர், அல்லது ஒரு மேலான இலட்சியத்தைப் பாவிக்கலாம். சுலபமாக உங்கள் சுவாசத்தை, அதாவது சுவாசம் உட்செல்வதனையும் வெளிச்செல்வதனையும், நுணுக்கமாக அவதானித்துத் தியானிக்கலாம்.

முதலில் ஆசனத்தில் இருந்து, சரீரத் தசைகளைத் தளர்த்தி சுவாசப் பயிற்சியையும், பின் மந்திர உச்சாடனத்தையும் செய்யவும். தியானிக்கும்போது மனதை ஒருமுகப்படுத்தி நீங்கள் தேர்ந்தெடுத்த பொருளில் தொடர்ச்சியாகச் செலுத்தவும். மனம் வேறு எண்ணங்களில் சென்றால் அதனை மெதுவாக, அமைதியாக அவதானித்து, திருப்பி, தேர்ந்தெடுத்த அப்பொருளில் செலுத்தவும். இதில் அவசரம் கூடாது. பலாத்காரம் பாவிக்காமல், மனதை லேசாக, மென்மையாக, ஒரு பொருளில் தொடர்ச்சியாகத் தங்கப் பழக்கவேண்டும். படிப்படியாக மனதைச் சிறிது நேரத்திற்கு இப்படி ஒரே பொருளிலே ஆழ்ந்து வைக்க முடியும். முதலில் 5 நிமிடமாகவும் பின் போகப்போகக் கூடிய நேரமும் தியானிக்கலாம்.

குறிப்பு: இவ்வழிமுறைகளை பயிற்சிபெற்ற, அனுபவமுள்ளவரிடமிருந்து (குரு) கற்றுக்கொள்ளல் சிறப்பானதாகும்.

**உசாத்துணை:**

தயா. சோமசுந்தரம், சிவயோகன்.சா (2004) தமிழ் சமுதாயத்தில் உளநலம், சாந்திகம், யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவாலயங்களில் பலியிடல்



- ஒரு கண்ணோட்டம் -

முருகேசு கௌரிகாந்தன்
விரிவுரையாளர்.



"மிருக பலியிடல் வரமா? சாபமா? என்ற தலைப்பில் அண்மையில் உதயன் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகள் இது தொடர்பாக சிந்திக்கத் தூண்டியதன் விளைவுதான் இக்கட்டுரை. சமயம் என்பது வழிபடப்படும் கடவுள், வழிபாடு செய்யும் மனிதன், வழிபாடு செய்யும் முறை என்ற மூன்றையும் உள்ளடக்கியதாகும். கடவுள் இல்லாத சமயங்களும் உண்டு. இந்த சமயங்கள் உயர்ந்த கொள்கைகளை முன்வைத்து இயங்கிக் கொண்டிருப்பதனையும் காண்கின்றோம். இந்துசமயத்தை அல்லது சைவ சமயத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட சிலர் காலங்காலமாக பலியிடலாகிய வழிபாட்டுமுறையினை செய்து வந்திருக்கின்றனர். அது பற்றியும் அதனை மேற்கொள்வது சரிதானா என்று ஆராய்ந்து பார்ப்பதும் தான் இக்கட்டுரை எழுதப்பட்டதன் நோக்கமாகும்.

இந்து சமயத்தை ஒரு வாழும் மதமாகக் காட்டுபவர்கள் இன்று அருகிக் காணப்படும் பலியிடல் சிந்துவெளிக் காலத்திலேயே காணப் பட்டதாகக் கூறுகின்றனர். இதற்கு ஒருவன் திமில் பருத்த வெள்ளாட்டை இழுத்துப் பிடிக்க இன்னொருவன் கத்தி ஓங்குவது போலவும், மக்கள் சுற்றி நின்று அதனைப் பார்ப்பது போலவும் பெண்ணொருத்தி முழந் தாளிட்டு வணங்குவது போலவுமுள்ள சித்திரமொன்று காணப்படு கின்றமையினை ஆதாரமாகக் காட்டுவர்.

வேதகாலத்திலும் பலியிடல் காணப்பட்டிருக்கிறது. இருக்கு வேத ஆரம்பத்தில் பால், தயிர், நெய் முதலிய ஆகுதிகளை அக்கினியி லிட்டு வழிபாடு செய்யத் தொடங்கி, யசுர் வேதகாலத்தில் பலியிடுதலை மேற்கொண்டு பல்வேறு யாகங்களை மேற்கொள்வதனைக் காண்கி றோம். யசுர் (யசுஸ்) என்பதன் வேர்ச்சொல்லே "யஜ" என்பதாகும். இதன் பொருள் "கொடுத்தல்" என்பதாகும். எதனைக் கொடுப்பதென்றால் ஆகுதி என்பது விடை. ஆஹுதி என்றாலே 'பலி' என்பதுதான் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசுர் வேதத்தைச் சார்ந்த பிராமண இலக்கியங்களில் அஸ்வமேதம், புருஷ மேதம், அக்கினி கோத்திரயாகம், ராஜசூயம், சோம யாகம், வாஜபேயம் முதலான பல யாகங்கள் பற்றிய விளக்கங்கள் உண்டு. அஸ்வமேத யாகம் என்றாலே எத்தனையோ குதிரைகளைப் பலியிட்டு செய்யப்படு கின்ற யாகமென்று அறிந்திருக்கின்றோம். குதிரையினை முன்னிறுத்திச் செய்யப்படுகின்ற கிரியை முறைமை பிற்காலத்தில் வந்தது.

வேதகாலத்தில் காணப்பட்ட பலியிடலை முதன்முதலாக எதிர்த்த மதங்கள் பௌத்தமும் சமணமுமே எனலாம். இது பற்றி கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் "கி.மு.ஆறாம் நூற்றாண்டளவில் கௌதமரும் மகாவீரரும் முறையே பௌத்த சமணநெறிகளைத் தாபித்து, வைதீக நெறியைக் கண்டித்தனர். அசோகன் முதலிய பேரரசர்களின் முயற்சியால், பௌத்தமும் சமணமும் பரத கண்டத்திற்குள்ளும் புறத்தும் பரவி வைதீகநெறியை நலிவுறச் செய்தன. இதனால் சமயக் கொள்கைகளை தர்க்கித்து ஆராய்ந்து அறிய வல்லவர்களுக்காக வைதீக நெறியில் ஆகமங்கள் உபநிஷத்துக்கள் முதலியவற்றை எழுதினர். பாமர மக்களைக் கவர்வதற்காக புராணங்களை இயற்றினர். (தமிழர் சமய வரலாறு) எனும் கூற்று இக்கட்டுரையின் வளர்ச்சிக்கான சிந்தனைத் தூண்டுதலைத் தந்தது.

சைவாகமங்களில் கிரியைகள் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆகமங்கள் குறிப்பிடும் ஆலய அமைப்பினில் 'பலிபீடம்' என்பது முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இப் பலிபீடத்தினை முன்னைய பலியிடலின் குறியீடாகவே கொள்ளவேண்டியிருக்கின்றது. சைவாலயங்களில் நைமித்தியக் கிரியைகளின் போது நீற்றுப் பூசனிக்காயை வெட்டி குங்குமம் பூசிச் செய்யும் கிரியைகள் மற்றும் சில ஆலயங்களில் நீண்ட காலத்திற்கு முன்னர் இரதோற்சவத்திற்கு முன்னதாக மிருகங்களைப் பலிகொடுத்தமை என்பன ஆலயக் கிரியைகளில் பலியிடல் செலுத்திய செல்வாக்கினையே காட்டுகின்றன. இவ்வாறானதொரு கண்ணோட்டத்திலேயே நவராத்திரி - விஜயதசமி நாளன்று நடைபெற்றுவரும் வன்னி வாழை வெட்டு நிகழ்வினையும் நோக்கவேண்டியிருக்கின்றது. மகிடாசுரனை தேவி சங்காரஞ் செய்யும் சித்திரமும் எமது குருக்கள்மார் வாளால் வாழையினையும் நீற்றுப் பூசனிக்காய் போன்றவற்றையும் வெட்டும் காட்சியும் சில சைவாலயங்களில் நிகழும் மிருக பலியிடலின் பிறிதொரு உணர்வின் வெளிப்பாடாகவே கொள்ள வேண்டியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட 'கோர' உணர்வு கலந்த வழிபாட்டு முறைகள் பலியிட்டு வழிபாடாற்றும் முறையை பாமரமக்களிடத்தில் தோற்று வித்திருக்கவேண்டும். ஐயனார், காளி, வயிரவர், அண்ணமார், ஐயப்பன் போன்ற கடவுளருக்கான குறிப்பிட்ட சில ஆலயங்களில் மட்டுமே இப் பலி யிடல் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் சுன்னாகம் ஐயனார், சங்கரத்தை பத்திரகாளி, ஏழாலை மத்தி பத்திரகாளி, சுழிபுரம் வழக்கம்பரை அம்மன், காளுவன் வயிரவர், கோணாவளை வயிரவர், வசாவிளான் மானம்பிராய் வயிரவர், உரும்பிராய் காட்டு வயிரவர், மாலை வயிரவர், ஏழாலை இலந் தையடி வயிரவர், புளியடி வயிரவர், ஏழாலை அண்ணமார், கட்டுவன் முனியப்பர் முதலான கோயில்களில் பெருந்தொகையாக ஆடுகள், கோழிகள் ஒரு காலத்தில் பலியிடப்பட்டன. கீரிமலை கவணாவத்தை வயிரவர் கோவிலில் இன்னமும் பலியிடல் நிற்பாட்டப்பட்டதாக இல்லை.

மேற்குறிப்பிட்ட ஆலயங்களில் மக்கள் தாம் நினைத்தபடி, தாம் நினைத்த நேரத்தில் பலியிடலை மேற்கொள்ளவில்லை. வருடத்தில் ஒரு முறைதான் நடைபெற்றது. பெரும்பாலானவர்கள் தமது நேர்த்திக் கடனை பலியிடல் மூலம் நிறைவு செய்தனர். எட்டுத் தினங்களுக்கு முன்னதாக ஆலயத்தில் 'விளக்கு'வைத்து எட்டாம் நாளில் ஆலய கதவினைத் திறந்து பொங்கல் செய்து பெரும்மடை பரவி, பலியிட்டு பயபக்தியுடனேயே வழி பாடாற்றினர். குறிப்பிட்ட தெய்வத்திற்கு இத்தினத்திற் பலி கொடுக்கா விட்டால் அத்தெய்வத்தின் சீற்றத்திற்குத் தாம் ஆளாகி அதன்மூலம் பெருந்துன்பத்திற்கும் மரணத்திற்கும் ஆளாகக் கூடுமென அஞ்சித்தான் பெரும்பாலானவர்கள் பலியிடலை மேற்கொண்டதாகத் தெரிகின்றது.

**பலியிடல் தடைசெய்யப்பட்ட விதம்**

வரலாறு அறிந்தவரையில் மிருக பலியிடலுக்கான முதலாவது தடை கௌதம புத்தராலேயே ஏற்படுத்தப்பெறுகின்றது. இந்தியாவின் மகத நாட்டு அரசனாகிய பிம்பசாரன் என்பவன் வேதியர்களைக் கொண்டு பெருந்தொகையான ஆடுகளைப் பலியிட்டு செய்யவிருந்த வேள்விக் களத்திற்குச் சென்ற புத்தர் அவனுக்கு நல்லுபதேசம் செய்து பலியிடல் தடை செய்யப்பெறுவதற்குக் காரணராக இருந்தார்.

உண்மைச் சைவர்களதும், சீவகாருண்ணியம் மிக்கவர்கள தும், பகுத்தறிவுச் சிந்தனையுடையவர்களதும் துணிகரமான நடவடிக்கை களினால் யாழ்ப்பாணத்தில் பலியிடல் நடைபெற்றுவந்த ஆலயங்களில் அவை பல ஆண்டுகளுக்கு முன்னரே தடை செய்யப்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக மிருகபலியிடலைத் தடை செய்வதற்காகத் தீவிரமாக உழைத்த பெருமை சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் (1878 - 1953) அவர்களையே சாரும். இவரால் எழுதப்பெற்ற சைவபோதம் முதற்புத்தகத்தில் (1915) வரும் "குருவும் சீடனும்" எனும் உரையாடல் முறையில் அமைந்த கட்டுரையில் பலியிடு தலின் கொடுமை காட்டப்பெறுவதுடன் சைவாலயங்களில் பலியிடுதலை மேற்கொள்வோரை நல்வழிப்படுத்தி சிவநெறியில் வாழச்செய்யும் வகை யிலான கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன. இப்பெரியார்தான் சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் கோயிற் பலியிடலை அக்காலத்தில் யாழ்ப்பாணத் தின் அரச அதிபராக இருந்த எச்.ஆர்.பிறீமன் (H.R.Freeman) அவர்கள் மூலம் தடைசெய்தவர். இப்பெரியாரை அவர் அதிபராகப் பணியாற்றிய சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி நிர்வாகத்தினர் அவர் ஓய்வு பெற்றபோது அவரின் பிரியாவிடை நிகழ்வுக்கு அழைத்தபோது "காளுவன் வயிரவர்" கோயிலில் நடைபெறும் பலியிடலை நிறுத்தச் செய்தால்தான் தம்மால் வரமுடியும் என்று கூறி பிரியாவிடை நிகழ்வுக்குச் செல்ல மறுத்து விட்டாராம்.

சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களின் சம காலத்த வரான நவாலியூரைச் சேர்ந்த சோமசுந்தரப் புலவர் (1878 - 1953) அவர் களும், சைவாலயங்களில் நடைபெற்ற மிருகபலியிடலைக் கடுமையாகச் சாடியவர். இவரால் எழுதப்பெற்ற 'சிறுவர் செந்தமிழ்' என்ற நூலில் உள்ள "ஆடு கதறியது" எனும் பாடல் இதற்குத் தக்க எடுத்துக் காட்டாகும். தனது அருமை மகன் படுகொலை செய்யப்பட்டமையினை அறிந்து அவனது தாயானவள் எவ்வாறு துன்ப துயரத்தினால் பதைபதைத்து அழுது அரற்று வாளோ அந்து போலத் தாயாடு புலம்புவதாகப் புலவர் பாடிய பாட்டு ஆராய்ந்து பார்க்காமல் பலியிடலை மேற்கொள்ளும் கன்னெஞ்சரையும் கரையச் செய்யும் ஆற்றல்மிக்கது. எடுத்துக் காட்டுக்கு நெஞ்சைத் தொட்ட சில கதறல்களை இங்கு தருகின்றோம்.

*"காலிலொரு பாவி கழுத்திலொரு மாபாவி*
*கோலியிழுக்கக் கொடும்பாவி வெட்டினனோ"*

*- பா அய் பாஅய்*

*"ஓங்கிய கத்தி விழும்போ துடல் நடுங்க*
*ஏங்கி யெனைநினைந்தென் னம்மாவோ வென்றாயோ!"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"தூவாரும் மேனி சுழன்று துடி துடிக்க*
*ஆவாவென வாய்விட் டையா விறந்தனையோ"*

*வாயில்லாச் சீவன் வதையாதீர் என்று சொல்ல*
*வாயுள்ளார் நெஞ்சம் மரமோ கருங்கல்லோ"*

*"சைவமு மில்லையோ சான்றோருமில்லையோ*
*தெய்வமுமில்லையோ வெண்மனது தேற்றிடவே!"*

*-பா அய் பா அய்*

புலவரவர்களின் இப்பாடல் பலரது அறிவுக்கண்களைத் திறந்திருக்கும். உண்மைச் சமயி எவரும் உயிர்ப் பலியிடலை அனுவள வேனும் அனுமதியார். ஏழாலையைச் சேர்ந்த திரு. மூத்தாம்பி தருமமூர்த்தி என்ற இளைஞர் இந்த உயிர்ப்பலியிடலை நிறுத்துவதற்காக கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (1925 - 2008) அவர்களைச் சந்தித்து ஆலோசனை கேட்டபோது, அவர் "நூற்றுக்கணக்கான உயிர்ப்பலியை நிறுத்த ஒரு உயிர் போனாற் போகட்டும்; யோசியாமல் காரியத்திலிறங் கும் பெரும் புண்ணியம் கிடைக்கும்" என்று அவர் கூறியனுப்பினாராம். திரு. தருமமூர்த்தி அவர்கள், திருவாளர்கள் க. அன்னலிங்கம், சு.திருச்செல்வம், ந. கிருஷ்ணமூர்த்தி, ந. பேரின்பமூர்த்தி முதலா னோரின் துணையுடன் பொலிஸ், நீதிமன்றம் வரை சென்று பலியிடலை நிறுத்து வதில் வெற்றிகண்டார்.

வேள்விகள் நடைபெற்ற ஆலயங்கள் தனியார்க்குச் சொந்த மாக இருந்தாலும் அவை பொதுமக்களுக்கான கோயில்களாகவே விளங்கின. வேள்விகளைத் தடைசெய்வதற்குத் திடசங்கற்பம் பூண்ட வர்கள் அந்த ஆலயங்களை விலை கொடுத்து வாங்கினர். வேள்விகள் நடைபெற்ற வயிரவர் ஆலயங்கள் ஞானவயிரவர் ஆலயங்களாக மாற்றம் பெற்றன. குருக்கள்மார், பெரியார்கள் முதலானோரைக் கொண்டு பூசைகள் திருவிழாக்களைச் செய்தனர். வழமையாக வேள்விகள் செய்த வர்கள் குறிப்பிட்ட தினத்தில் வேள்வி செய்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டபோது அவ்வாறானவர்களை எதிரிகளாகக் காட்டி பொலிஸில் முறைப்பாடு செய்து நீதிமன்ற உத்தரவுப்படி தடை செய்தனர். தடையினை மீறியவர்கள் தண்டனையை அனுபவித்தனர். தண்டனைக்குப் பயந்து பல ஆலயங்களில் மிருகபலியிடல் தானாக நின்றது. ஞானவயிரவர்க்கு அருகில் "ஆவேச வயிரவர்" ஆலயம் நிறுவி வேள்வி செய்ய முயற்சி செய்தவர்களுக்கு ஆதரவு கிடைக்காமையால் அவர் முயற்சி தோல்வியில் முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில ஆலயங்களில் வேள்விகள் நிறுத்தப் பெற்றவுடன் உருவாடி வழிபாடாற்றத் தொடங்கினர். உருவாடியவர் அந்த ஆலயத்தில் பலியிடலை மேற்கொள்ளக்கூடாது என்றும் மேற்கொண்டால் பாவம், பழிகளைத் தேடிக்கொள்ள வேண்டிவரும் என்றும் வாக்குச் சொல்லி மக்களை நன்னெறிப்படுத்தியதும் உண்டு.

**நிறைவுரை**

வட இந்தியாவில் சமண, பௌத்த மதங்களின் சீர்திருத்தக் கருத்துக்களின் செல்வாக்கினால் இந்து சமயம் சீராக்கம் பெற்றது. தென்னாட்டிலும் சங்கமருவிய காலத்திற் செல்வாக்குப் பெற்ற சமண, பௌத்த மதக்கொள்கைகளைச் சைவசமயம் உள்வாங்கி, தன்னிட மிருந்த மேலான கருத்துக்களையும் கொண்டு நவீன சமயமாக பரிணாமம் பெற்றிருக்கின்றது. சைவம் அன்பை அடிப்படையாகக் கொண்டது. வன் புக்கு அதில் இடமில்லை. சுத்த சைவ உணவை உண்ணச் செய்வதன் மூலம் சாத்வீக உணர்வை வளர்க்க அது கடும் முயற்சி செய்து கொண்டி ருக்கின்றது. பூவையும் நீரையும் கொண்டுதான் பூசை நடைபெற்றாலும் அதன் மூலம் 'பூக்கிள்ளலும் பாவம்' எனும் உணர்வினை ஏற்படுத்தி மனிதனை மேநிலை அடையச் செய்யலாம் எனும் வகையில் அதன் கொள்கைகள் காணப்பெறுகின்றன. பலியிடல் எந்த வடிவத்திற் காணப் பட்டாலும் அவற்றை நாம் அனுமதிக்கக்கூடாது. பலியிடல் என்பது எமது அகராதியிற் கூட இடம்பெற அனுமதிக்கக்கூடாது. முன் மாதிரியாக வாழ் கின்றவர்களால் வழங்கக்கூடிய புனிதமான அறிவூட்டல்களால் அருகி வரும் மிருகபலியிடலை இல்லாமற் செய்வது முடியாத காரியமல்ல.

**'அறிவிலார் அன்பும் சிவமும் இரண்டென்பர்'**

**'அன்பே சிவம்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தக விநாயகர் ஆலயத்தின் வாணி விழாப் பாடல்

பல்லவி

வித்தக விநாயகனே - பல
விந்தைகள் புரிந்திடும் வேதநாயகனே

(வித்தக)

அநுபல்லவி

கல்வியியற் கல்லூரியின் கண்களாய்த் திகழும்
வித்தகா முடிமன்னா வேண்டுமய்யா உம் அருள்

சரணம்

1) கலைமகள் அருகிருக்க கந்தனும் உடனிருக்க
கம்பீரமாய் அமர்ந்து காட்சி தரும் ஐயனே
பல்கலையும் தழைத்தோங்க பண்ணிசையும் தவழ்ந்துவர
வெண்கலை நாயகியின் விரல்களும் இசைக்குதம்மா

(வித்தக)

2) வேப்பமர நிழலினிலே வீசிடும் தென்றலிலே
வேதனைகள் போக்கி என்றும் வேண்டும் வரம் தந்தருள்வாய்
உந்தனது வீணை நாதம் ஓங்காரமாய் ஒலிக்க
எங்கள் தலை பணிந்தே இனிய விழா எடுத்தோமம்மா

(வித்தக)

ஆக்கம்:

**திரு. மா. பிரபாகரன் (விரிவுரையாளர்)**
காப்பாளர். இந்துமன்றம்
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி

இசை:

**திருமதி. சிவை குகநேசன்**
விரிவுரையாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தக விநாயகனே

பல்லவி

விந்தைகள் பல புரியும் வித்தக விநாயகனே
கோப்பாய் பதிமேவும் வித்தக விநாயகனே

அனுபல்லவி

கலை ஞானமளித்திடும் கலைமகளுடனே
வெற்றிவேல் தாங்கிய கந்தவேள் பெருமானும்

சரணம்

காவல் தெய்வமாய் வேப்பமர நிழல் தன்னில்
அமர்ந்தே அன்பர்கட்கு அருள்மழை பொழிந்திடும்
ஆதி வைரவராம் முடிமன்ன வைரவரும்
இணைந்தே இன்னல்களைப் போக்கி அருள் புரிவாயே.

குகேந்திரன் அனுஷன்
சங்கீதத்துறை
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

* * *

# அருட்கவி

விடையவனும் உமையவளும் பெற்றணைத்த
வித்தகவி நாயகரின் கருணைச் செல்வம்
நடைமுறையில் கல்விக்கல் லூரியாகி
நலமோங்கு கோப்பாயில் கற்பகம் போல்
உடையகலை அனைத்தையும் உதவுகின்ற
ஊருணியாய் கமலதனத் தெய்வத்தாயார்
புடை சூழ்ந்து வரமருள ஓங்கு மேருப்
பொருபெனவே பல்லாண்டு வாழி வாழி

- வீ. விநாசித்தம்பிப் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரின் பதினாறு தோற்றங்கள்



பால விநாயகர்



உச்சிஷ்ட விநாயகர்



சக்தி விநாயகர்



த்விஜ விநாயகர்



வீர விநாயகர்



நிருத்த விநாயகர்



தருண விநாயகர்



க்ஷிப்ர விநாயகர்



பக்த விநாயகர்



லக்ஷ்மி விநாயகர்



ஸித்தி விநாயகர்



புவனேச விநாயகர்



ஹேரம்ப விநாயகர்



மஹா விநாயகர்



விஜய விநாயகர்




ஊர்த்வ விநாயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தக விநாயகரும் உடனுறையும் மூர்த்திகளும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரஸ்வதி அம்மன்



முருகப்பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பீடாதிபதி உயர்திரு. எஸ்.கே. யோகநாதன் அவர்கள் ஆசியுரை வழங்குகிறார்.



இந்து மன்றக் காப்பாளர், விரிவுரையாளர் திரு.மா. பிரபாகரன்
வாழ்த்துரை வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்வின் சில நிழற்பதிவுகள்...




சிவஸ்ரீ அகோரசிவக்குருக்கள் அவர்களை பீடாதிபதி பொன்னாடை
போர்த்திக் கௌரவித்தல்



ஓவியர் திரு. திவாகரன் அவர்களை பீடாதிபதி பொன்னாடை
போர்த்திக் கௌரவித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கணபதி பிறின்டேர்ஸ், திருநெல்வேலி. 021 321 5077

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org